தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆறு முக்கிய துறைகளில் 217 முக்கிய திட்டங்கள்: தென் மாவட்டங்களில் முதலீடு பெருக வாய்ப்பு

**சென்னை,**

தொலைநோக்குத் திட்டத்தின் இரண்டாம் பகுதியில் ஆறு முக்கிய துறைகளில் 217 உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிதாக வெளியிடப்பட்டுள்ள தொழில் கொள்கையால் தென் மாவட்டங்களில் முதலீடுகள் பெருக வழி ஏற்படும்.

இது தொடர்பாக, தொலைநோக்குத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம்:

எரிசக்தி, போக்குவரத்து, தொழில் மற்றும் வர்த்தக உள்கட்டமைப்பு, நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள், வேளாண்மை, மனித வள மேம்பாடு ஆகிய ஆறு துறைகளில் 217 முக்கிய திட்டங்களைச் செயல்படுத்த தொலைநோக்குத் திட்டத்தின் இரண்டாம் பகுதி வழிவகை செய்கிறது. இந்த தொலைநோக்குத் திட்டத்தில் ரூ.15 லட்சம் கோடி அளவுக்கு முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. எரிசக்தித் துறைக்கு, ரூ.3 லட்சத்து 89 ஆயிரத்து 335 கோடியும், போக்குவரத்துத் துறைக்கு ரூ.3 லட்சத்து 68 ஆயிரத்து 123 கோடியும், தொழில் மற்றும் வர்த்தக உள்கட்டமைப்புத் துறையில் ரூ.1 லட்சத்து 71 ஆயிரத்து 285 கோடியும், நகர்ப்புற உள்கட்டமைப்புத் துறையில் ரூ.2 லட்சத்து 63 ஆயிரத்து 350 கோடியும், வேளாண்மைத் துறையில் ரூ.1 லட்சத்து 21 ஆயிரத்து 400 கோடியும், மனித வள மேம்பாட்டுத் துறையில்

(சுகாதாரம் மற்றும் கல்வி) ரூ.59 ஆயிரத்து 140 கோடியும் முதலீடுகளாக கிடைக்கும் என்று தொலைநோக்குத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பொது மற்றும் சமூக உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.75 ஆயிரம் கோடி எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதுள்ள திட்டங்களை மேம்படுத்துவதற்காக ரூ.52 ஆயிரத்து 367 கோடி உள்பட மொத்தம் ரூ.15 லட்சம் கோடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் முதல் கட்டமாக வரும் அக்டோபர் மாதம் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடைபெறவுள்ளது.

புதிய தொழில் கொள்கை: புதிய தொழில் கொள்கையில், தூத்துக்குடி, தேனி, திருநெல்வேலி, மதுரை, விருதுநகர், திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களின் தொழில் துறை வளர்ச்சிக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், தென் மாவட்டங்களில் தொழில் வளம் பெருகும்.

மேலும், வாகன தயாரிப்பு மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்திக்கென தனியாக ஆலோசனைக் குழு அமைக்கப்படும். இந்தக் குழுவில் தொழில் துறை அமைச்சர் மற்றும் முன்னணி தொழில் நிறுவனங்களின் அதிபர்கள் மற்றும் தொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவார்கள். இந்தக் குழு அடிக்கடி கூடி, வாகன உற்பத்தித் தொழில் உள்பட தொழில் துறையில் உள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதித்து அரசுக்கு பரிந்துரைகளை வழங்கும்.

பாலிடெக்னிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் திறனை மேம்படுத்த படிக்கும்போதே தொழில் நிறுவனங்களுடன் அவர்கள் இணைந்து செயல்படுவதற்கான சூழல் ஏற்படுத்தித் தரப்படும். இதன் மூலம், வாகன உற்பத்தித் தொழிலில் திறமை படைத்த மாணவர்களை படிக்கும்போதே உருவாக்க முடியும் என்று புதிய தொழில் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்னேரி ஏரியை ரூ.1.44 கோடியில் சீரமைக்கும் பணி தொடக்கம்

**காஞ்சிபுரம்,**

வாலாஜாபாத் அருகே தென்னேரி கிராமத்தில் உள்ள ஏரியை ரூ. 1.44 கோடியில் தூர்வாரி சீரமைக்கும் பணி வெள்ளிக்கிழமை தொடங்கியது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள முக்கிய ஏரிகளில் ஒன்று தென்னேரி. இந்த ஏரி காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகள் வரிசையில் முதல் இடத்தில் உள்ளது.

இந்த ஏரியை நம்பி, தென்னேரி, கட்டவாக்கம், அயிமிஞ்சேரி, மஞ்சமேடு, அகரம், உள்ளாவூர், தொள்ளாழி, வாரணவாசி உள்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயனடைந்து வந்தன. இந்நிலையில் இந்த ஏரியை தூர்வாரி, மதகு மற்றும் கலங்கள் பகுதிகளை சீரமைக்க வேண்டும்.இதன் மூலம் கூடுதல் நீரை சேமித்து வைத்து, ஏரிப்பாசனம் பெற முடியும் என்று இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் தென்னேரியை தூர்வாரி, கலங்கள் மற்றும் மதகு பகுதிகளை சீரமைக்க தமிழக அரசு ரூ. 1.44 கோடி ஒதுக்கியது.

இதைத் தொடர்ந்து இத்திட்டப் பணிகளை தமிழக அமைச்சர் டி.கே.எம். சின்னையா தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உத்தரமேரூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் வாலாஜாபாத் பா.கணேசன், ஒன்றியக் குழுத் தலைவர் தென்னேரி வரதராஜுலு உள்பட பலர் கலந்து

கொண்டனர்.

## பூண்டி ஏரியை வந்தடைந்தது 1.2 டி.எம்.சி. தண்ணீர்

**திருவள்ளூர்,**

ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையிலிருந்து கடந்த மாதம் திறக்கப்பட்ட தண்ணீர் 1.2 டி.எம்.சியாக பூண்டி ஏரியை வந்தடைந்தது.

இதனால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் முக்கிய ஏரியாக விளங்குவது பூண்டி ஏரி.

இந்த ஏரியில் சேமிக்கப்படும் தண்ணீர், இணைப்புக் கால்வாய்கள் வழியாக செம்பரம்பாக்கம், புழல் மற்றும் சோழவரம் ஏரிகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து சென்னைக் குடிநீருக்காக பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் கடந்த ஆண்டு கடுமையான கோடை வெப்பத்தாலும், பருவமழை பொய்த்துப் போனதாலும் வரலாறுக் காணாத அளவுக்கு பூண்டி ஏரி வறண்டது. மொத்தம் உள்ள 3 ஆயிரத்து 231 மில்லியன் கன அடியில் வெறும் 240 மில்லியன்

கன அடி வரை மட்டுமே நீர் இருப்பு இருந்தது. மேலும் ஆந்திர மாநிலம், காளஹஸ்தி அருகே உப்பளமடுகு என்ற இடத்தில் அணை உடைந்ததால் ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்துக்கு வர வேண்டிய தண்ணீரும் வரவில்லை.

இதனால் 2014-ஆம் ஆண்டு சென்னைக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் 10-ஆம் தேதி ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அந்த தண்ணீர், தெலுங்கு கங்கை கால்வாய் வழியாக தமிழகத்துக்கு வந்துக் கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி, பூண்டி ஏரிக்கு 1.2 டி.எம்.சி. (ஆயிரத்து 200 மில்லியன் கன அடி) தண்ணீர் வந்துள்ளது.

மேலும் ஆந்திர மாநிலத்தில் இருந்து தெலுங்கு கங்கை கால்வாய் வழியாக விநாடிக்கு 524 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. பூண்டி ஏரியில் இருந்து செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளுக்கு வினாடிக்கு 567 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. தற்போது பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து 586 மில்லியன் கன அடியாக உள்ளது.

## காணை நோய் தடுப்பூசி சிறப்பு முகாம்

**பேரையூர்,**

மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் மார்ச் 1 முதல் 21-ம் தேதி வரை காணை நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.

இது குறித்து தமிழ்நாடு கால்நடை உதவி இயக்குநர், டாக்டர் ஜெகன்முத்தையா நிருபர்களிடம் கூறியதாவது: மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப் பகுதிகளிலும் கால்நடை துணை இயக்குநர் ஆலோசனை மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்பிரமணியன் உத்தரவின் பேரில் மார்ச் 1 முதல் 21-ஆம் தேதி வரை காணை நோய் தடுப்பூசி முகாம்கள் நடைபெற உள்ளன. இந்த முகாமில் கோமாரி நோய், காணை நோய் தடுப்பூசிகள் போடப்பட உள்ளது. வருவாய்த்துறையினர், ஊரகவளர்ச்சித்துறையினர் மற்றும் சுய உதவிக்குழுக்கள் ஒருங்கிணைந்து முகாம்களை நடத்த உள்ளனர். கால்நடைகள் வைத்திருக்கும் அனைத்து பொதுமக்களும் பங்குபெற்று பயன்பெறலாம்.

மேலும் பேரையூர், தே.கல்லுப்பட்டி பகுதிகளில் கால்நடைகளுக்கு தீவனங்கள் தேவைப்படுவோர் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவரின் பரிந்துரைக் கடிதம் பெற வேண்டும். அதனுடன், குடும்ப அட்டை நகல் மற்றும் இரு புகைப்படங்களை இணைத்து திருமங்கலம் தீவனக்கிடங்கில் கொடுத்து மானிய விலையில் தீவனங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

**காரமடையில் யானைகள் அட்டகாசம்: வாழை, தென்னை மரங்கள் சேதம்**

**மேட்டுப்பாளையம்,**

காரமடையை அடுத்த சீளியூர் பகுதியில் உள்ள தோட்டத்தில் யானைகள் செய்த அட்டகாசத்தால் 1500-க்கும் மேற்பட்ட வாழை, தென்னை மரங்கள் சேதமடைந்தன.

காரமடையை அடுத்த சீளியூர் பகுதியில் கொண்டையசாமி என்பவருக்குச் சொந்தமான விவசாய நிலம் உள்ளது. இங்கு வாழை, தென்னை பயிரிடப்பட்டிருந்தது. இந்நிலையில், வியாழக்கிழமை நள்ளிரவு, இவரது தோட்டத்தில் 15-க்கும் மேற்பட்ட யானைகள் புகுந்தன.

அதைக்கண்ட கொண்டையசாமி அக்கம்பக்கத்தினர் துணையுடன் யானைகளை விரட்ட முயன்றார். அதற்குள், அந்த தோட்டத்திலிருந்த 1,000 வாழை மரங்களையும், 25-க்கும் மேற்பட்ட தென்னை மரங்களையும் யானைகள் சேதமாக்கின. தொடர்ந்து, அதேபகுதியிலுள்ள மீனாம்பிகை என்பவரது தோட்டத்தில் புகுந்த யானைகள், அங்கு 2 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 500 வாழை மரங்கள் உள்ளிட்ட விவசாயப் பயிர்களையும், ரங்கராஜ் என்பவரின் தோட்டத்தில் இருந்த 50 தென்னை மரங்களையும் சேதப்படுத்தின. யானைகளின் இந்த தொடர் அட்டகாசத்தால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதை உடனடியாக தடுக்கவும், யானைகளின் அட்டகாசத்தால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிர் இழப்பீட்டிற்கு நிவாரணம் வழங்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 43.63 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 43.63 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 694 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3 டி.எம்.சி.

**நதிகள் இணைப்பு நடைபயண குழுவினருக்கு வரவேற்பு**

**ராணிப்பேட்டை,**

இந்திய நதிகள் இணைப்பு இயக்கம், நியூ லைஃப் சமுதாய மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழக விவசாயிகள் சங்கம் ஆகியன இணைந்து தேசிய நதிகளை இணைத்து நீர்வழிச் சாலை அமைக்க தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வர வேண்டும், நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கத் தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றன.

இதற்கான இயக்கத் தலைவர் ஷேக் சர்தார் தலைமையில் கல்லூரி மாணவிகள் உள்ளிட்ட தன்னார்வலர்கள் 20 பேர் கொண்ட குழுவினர் கடந்த 9ம் தேதி ஓசூரில் நடைபயணத்தை தொடங்கினர். வரும் 27ம் தேதி சென்னை தலைமை செயலகத்தில் தமிழக முதல்வரை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கின்றனர்.

இந்த நடைபயணக் குழுவினர் ஆற்காடு வழியாக ராணிப்பேட்டைக்கு வெள்ளிக்கிழமை காலை வந்தடைந்தனர். அவர்களுக்கு பாலாறு பாதுகாப்பு விழிப்புணர்வு இயக்க ஒருங்கிணைப்பாளர் கே.எம்.பாலு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு இயக்கத் தலைவர் டி.மணிவாசகம், செயலாளர் கே.குசேலன், உதவும் உள்ளங்கள் செயலர் ஆர்.எஸ். ஜெயின், சமூக ஆர்வலர் மோகன சுகுமார் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து நதிகள் இணைப்பு குறித்த விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி நதிகள் இணைப்பது

குறித்தும்,பாலாற்றைப் பாதுகாப்பது குறித்தும் பேசினார்கள். அப்போது நடைபயணக் குழுவினருக்கு நிதி வழங்கப்பட்டது. பின்னர் நடைபயணக் குழுவினர் வாலாஜா வழியாக சென்னை புறப்பட்டுச் சென்றனர்.

## சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்த வேண்டும்

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் மழை பற்றாக்குறை உள்ள நிலையில், சொட்டு நீர் பாசன முறையை விவசாயிகள் கடைபிடித்து அதிக மகசூல் பெற முழு அளவில் ஈடுபாடு காட்ட வேண்டும் என்று வேளாண் இணை இயக்குநர் ஜெயசுந்தர் கேட்டுக் கொண்டார்.

ஆட்சியர் அலுவலக கருத்தரங்கு கூடத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் இரா.நந்தகோபால் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விவசாயிகள் பல்வேறு குறைகளை தெரிவித்தனர்.

மாவட்டத்தில் தென்னையில் ஏற்பட்டுள்ள நோய் பாதிப்பை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் தென்னை விவசாயிகள் அதிகளவில் பாதிப்பை சந்தித்து வரும் நிலையில் அவர்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும். கடந்த ஆண்டில் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளின் கணக்கெடுப்பு சரிவர எடுக்கப்படவில்லை.

ஆம்பூர் உள்ளிட்ட இடங்களில் விவசாயக் கிடங்குகளைத் திறக்க வேண்டும்.

காட்டுப் பன்றிகளால் வனப்பகுதியையொட்டியுள்ள விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். இதைத் தடுக்க மின்வேலி அல்லது தடுப்பு வேலியை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் விவசாயத் தேவைகளை அதிகாரிகள் அறிந்து கிராமத்துக்கே சென்று அவற்றை நிறைவேற்றித் தருகின்றனர்.

அத்தகைய நடைமுறையை தமிழகத்தில் அதிகாரிகள் கடைபிடிக்க வேண்டும் என்றனர்.

கூட்டத்தில் பேசிய வேளாண்மை துறை இணை இயக்குநர் ஜெயசுந்தர், சொட்டு நீர் பாசனத்தின் மூலம் வறட்சியான காலங்களிலும் விவசாயத்தில் அதிக மகசூல் பெற முடியும். இந்த நடைமுறையை பின்பற்றும் விவசாயிகள் மற்ற விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கவேண்டும்.

விவசாயிகள், தண்ணீர் பற்றாக்குறை நிலவும் பகுதிகளில் உள்ள பயிர்களுக்கு மெத்தலேட் பாக்டீரியாவை தூவினால் பயிர்கள் 3 வாரம் வரை தண்ணீர் இன்றி தாக்குப் பிடிக்கும். அதேபோல் தென்னை விவசாயிகள் மரங்களுக்கு பூசா ஹைட்ரோஜெல் மருந்தை தெளிப்பதன் மூலம், தென்னை மரங்கள் வறட்சியை தாக்குப் பிடிக்கும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் (திருப்பத்தூர்) தின்கர்குமார் மற்றும் திரளான விவசாயிகள் பங்கேற்றனர்.

## கால்நடைகளுக்கு உலர் தீவனங்கள் வழங்கும் விழா

**ஊத்தங்கரை,**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், கால்நடைகளுக்கு உலர் தீவனங்கள் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது .

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இந்த விழாவுக்கு மருத்துவர் பிரபு தலைமை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் கிருஷ்ணன் பயனாளிகளுக்கு உலர் தீவனங்களை வழங்கினார்.

மாநில நிலவள வங்கித் தலைவர் சாகுல் அமீது, ஒன்றியக் குழு துணைத் தலைவர் சுப்பிரமணி, நகரச் செயலாளர் சிவானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருச்செங்கோட்டில் விதை திட்டப் பணிகள் ஆய்வு

**திருச்செங்கோடு,**

திருச்செங்கோட்டில் விதைச் சான்று துறை வேளாண் இணை இயக்குநர் கோவிந்தராஜன் விதை திட்டப் பணிகளை வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார்.

திருச்செங்கோடு வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பில் உள்ள வயல்மட்ட விதைகள், சுத்திகரிக்கப்பட்ட நெல், பயறு வகை விதைகள், நிலக்கடலை விதைகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார். விதைகள் தரமானதாக, சரியான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றதா, விதைகளில் சான்று அட்டை பொருத்தப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, அறிவுரை வழங்கினார்.இந்த ஆய்வின் போது வேளாண் உதவி இயக்குநர்கள் மணிக்குமார் (விதைச் சான்று), நமச்சிவாயம், வேளாண் துறை அலுவலர்கள், பணியாளர்கள் உடனிருந்தனர்.

## பிற்பகலுக்கு மேல் காற்றின் வேகம் அதிகரிக்கும்

**நாமக்கல்,**

நாமக்கல் மாவட்ட வானிலை அடிப்படையில் அடுத்த நான்கு நாள்களுக்கு பிற்பகலுக்கு மேல் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (பிப்.22 முதல் 25-ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடனும், மழையின்றியும் காணப்படும். காற்றின் திசைவேகம் மணிக்கு 4 கிமீ முதல் 5 கிமீ வேகத்தில் தென்கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 52 சதம் முதல் அதிகபட்சம் 86 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: அடுத்த நான்கு நாள்கள் வானம் லேசான மேகமூட்டத்துடனும், காற்றின் வேகம் பிற்பகலுக்கு மேல் அதிகமாகவும் காணப்படும். இதனால், வெயிலின் தாக்கம் தாற்காலிகமாகக் குறைவாக இருக்கும். இதன்காரணமாக பல பண்ணைகளில் கோழிகளிடையே தீவன எடுப்பு குறைவாக இருக்கும் என்பதால் எரிசக்தியின் அளவைக் குறைத்தும், புரதத்தின் அளவை சற்றே கூட்டி அளிக்க வேண்டும். தீவன எடுப்பையும் கண்காணித்து வர வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி, மேல் மூச்சுக்குழல் நோயால்

இறந்திருப்பது தெரிய வந்தது. மேல்மூச்சுக்குழல் நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால், பண்ணையாளர்கள் கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி, பண்ணை சுகாதாரத்தை மேம்படுத்தவும், வெப்ப அயற்சியைத் தடுக்க கோடைகால முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்திடவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..: வெப்பநிலை உயர்வின் காரணமாக மரவள்ளியில் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் பெருமளவில் காணப்படுகிறது. இதனால், கரும்படல நோய் அதிகமாகப் பரவ வழிவகுக்கும். இது ஒளிச்சேர்க்கையைக் கட்டுப்படுத்தி செடியின் வளர்ச்சி குறைந்து மகசூல் இழப்பை ஏற்படுத்தும். இந்த சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த டிரை அசோஃபாஸ் என்ற பூச்சிக்கொல்லி மருந்தை லிட்டர் தண்ணீருக்கு ஒரு மிலி மற்றும் ஒரு மிலி ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சந்தூர் ஏரிக்கு தண்ணீர் வருவதில் சிக்கல்

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டம், பாளேகுளி- சந்தூர் ஏரி கால்வாய் சீரமைக்கப்படாததால், ஏரிக்கு தண்ணீர் வருவதில் சிக்கல் நிலவுவதாக மாவட்ட ஆட்சியரிடம் தமிழக விவசாயிகள் சங்கத்தினர் வெள்ளிக்கிழமை புகார் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 27 ஏரிகளை இணைக்கும் வகையில் பாளேகுளி- சந்தூர் பாசனக் கால்வாய் திட்டம் அண்மையில் பயன்பாட்டுக்கு வந்தது.

இந்த நிலையில், கால்வாயில் பாறைகளும், கல்களும் அகற்றப்படாததால் சந்தூர் ஏரிக்கு திறந்து விடப்பட்ட தண்ணீர் வந்து சேரவில்லை.

என்.தட்டக்கல் வீரமலை சாலை அருகில் உள்ள பாலப் பகுதியில் தண்ணீர் சீராக செல்லாமல் குட்டை போல தேங்கியுள்ளது. சில இடங்களில் கால்வாய் மேடாக காட்சியளிக்கிறது.

இந்த நிலையில், விவசாயிகள் தங்களால் இயன்ற அளவு கால்வாயை சீரமைத்தனர். கால்வாயில் தண்ணீர் செல்வதற்கு தடையாக இருக்கும் பெரிய அளவிலான பாறைகளை அகற்ற ஒப்பந்ததாரர் மறுத்து வருகிறார்.

இதுபோன்ற குறைகளை நீக்கி பாசனக் கால்வாயை சீரமைக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடம் விவசாயிகள் கேட்டுக் கொண்டனர்.

**வறட்சியை சமாளிக்க ரூ. 10.68 கோடி: ஆணையர்**

**திருச்சி,**

திருச்சி மாநகரில் வறட்சிக் காலத்தை சமாளிக்க ரூ. 10 கோடி மதிப்பில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக மாநகராட்சி ஆணையர் வே.ப. தண்டபாணி தெரிவித்தார்.

திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாமன்றத்தின் அவசரக் கூட்டத்தில் கோடைகாலத்தை சமாளிப்பது குறித்து உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து அவர் பேசியது:

கோடைகாலத்தை சமாளிக்க தமிழக அளவில் ரூ. 600 கோடியை முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கியுள்ளார். இதில் திருச்சி மாநகராட்சிக்கு ரூ. 10.68 கோடி ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டுள்ளது.

இதிலிருந்து அனைத்து வார்டுகளிலும் போர்க்கால அடிப்படையில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கலாம். கைப்பம்புகளில் மின்மோட்டார்கள் பொருத்தலாம். கூடுதலாக சின்டெக்ஸ் தொட்டிகள் அமைக்க முடியும். தேவைப்படும் பகுதிகளுக்கு லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்யலாம்.

காவிரி ஆற்றிலுள்ள குடிநீர் சேகரிப்புத் தொட்டிகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் மூலம் திருச்சி மாநகரில் குடிநீர் தட்டுப்பாடு இருக்காது.

அண்மையில் தொடங்கப்பட்ட ரூ. 221 கோடி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் புதிதாக ஒரு லட்சம் குடிநீர் இணைப்புகள் வழங்க முடியும். தவணை முறையிலும்கூட வைப்புத் தொகை பெற்று இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் தண்டபாணி.

**அரியலூர் மாவட்டத்தில் அதிக அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வலியுறுத்தல்**

**அரியலூர்,**

அரியலூர் மாவட்டத்தில் அதிக அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பேசியது:

உலகநாதன்(தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): அரியலூர் மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. மாவட்டத்தின் டெல்டா பகுதியான திருமானூர் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அதிக அளவில் இல்லை.

அரசு சார்பில் இரண்டாவது கட்டமாக நெல் கொள்முதல் நிலையம் திறக்கப் போவதாக கூறுகிறீர்கள். நீங்கள் திறப்பதற்குள் தனியார் நெல்லை வாங்கி விடுவார்கள், எனவே உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அதிக அளவில் திறக்க வேண்டும். காரைகுறிச்சியிலிருந்து அரியலூருக்கு விக்கிரமங்கலம், ஸ்ரீபுரந்தான் வழியாக அதிக பேருந்துகளை இயக்க வேண்டும்.பொதுப்பணித்துறை சார்பில் குளங்கள் நீண்ட நாள்களாக தூர்வாரப்படாமல் உள்ளது. அதனை தூர்வார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

செங்கமுத்து(அரியலூர் மாவட்ட விவசாயிகள் சங்கம்): கரும்புக்கு அரசு அறிவித்த விலையை ஆலைகள் வழங்குவதில்லை. விவசாயிகளுக்கு வண்டி வாடகை கழித்து குறைவான தொகையே கிடைக்கிறது. இதனை சீர் செய்ய வேண்டும். ஏரி, குளங்களை தூர்வாரினால் மழைக் காலங்களில் நீர் வீணாவதை தடுக்கலாம். தமிழக அரசின் பட்ஜெட்டில் ஏரிகள் சீரமைப்புக்கு தனியாக நிதி ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம் ஆனால் ஒதுக்கப்படவில்லை. வீணாகும் நீரை தேக்கி வைக்க தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் 11 விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி செய்ததற்காக மானியத் தொகைக்கான காசோலைகளையும், 5

விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த விவசாய கையேடுகளையும் வழங்கி பேசும் போது:

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2013-14 ல் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம், மண்புழு உரம் தயாரிப்பு மானியம் தயாரிப்பு மையம் அமைக்க 50 சதவீத மானியத்தில் ரூ.15,000 வீதம் 75 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மானியத் தொகை ரூ.11.25 லட்சமாகும். கரும்பு தோகையை தூளாக்கும் இயந்திரம் கொண்டு தூளாக்கிய பின் மக்க வைத்து மண் வளத்தை மேம்படுத்தும் பொருட்டு 50 சத மானியத்தில் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 2,000 வீதம் 300 விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதற்கான மானியத் தொகை ரூ.6 லட்சமாகும்.

அரியலூர் மாவட்டத்தில் உணவு உற்பத்தியை பெருக்க நடப்பு கோடை பருவத்தில் அதிக பாசன வசதி உள்ளவர்கள் நெல் மற்றும் மக்காச்சோளமும், குறைவான பாசன வசதி உள்ளவர்கள் உளுந்தும் சாகுபடி செய்யலாம். மேலும் நெல் மற்றும் பயறு வகைகள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சத மானியத்தில் வழங்க இடுபொருட்கள் தயார் நிலையில் உள்ளது. எனவே அரியலூர் மாவட்ட விவசாயிகள் இதனைப் பயன்படுத்திக் கொண்டு, நடப்பு பருவத்தில் நெல், தானிய வகைகள் மற்றும் பயறு வகைகள் சாகுபடி செய்து நம் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதுடன் இலக்கினை அடைய உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

இக்கூட்டத்தில் துணை ஆட்சியர் (பயிற்சி) ஜெயசந்திரன், இணை இயக்குநர் (வேளாண்மை) மல்லிகா, விவசாய சங்கப் பிரதிநிதிகள் அம்பேத்கார்வலியன், பிச்சைபிள்ளை,ஜெயசந்திரன்,மணியன் மற்றும் திரளான விவசாயிகள் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கைக்குறிச்சி கல்லூரியில் உயிரியல் தாவரக் கண்காட்சி**

**புதுக்கோட்டை,**

கைக்குறிச்சி ஸ்ரீபாரதி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற உயிரியல் தாவரக் கண்காட்சி புதன்கிழமை நடைபெற்றது.

கல்லூரித் தலைவர் குரு. தனசேகரன் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியை கல்லூரி முதல்வர் ஜானகி சுவாமிநாதன் தொடக்கிவைத்துப் பேசியது:

உலகில் மிகப் பெரிய பல்லுயிர் வாழ்நிலைகளைக் கொண்ட 17 நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உலகில் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் 2.4 சதவிகிதமும், நீர் பரப்பில் 4 சதவிகிதமும் இந்தியாவில் உள்ளது. உலகில் பதிவுசெய்யப்பட்ட உயிரினங்களில் 7 முதல் 8% நம்நாட்டில்தான் உள்ளன. 2012-ம் ஆண்டு கணக்கின்படி இந்தியாவில் 45,968 தாவர இனங்களும், 91,364 உயிரினங்களும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. 5,650-க்கும் மேற்பட்ட நுண்ணுயிரினங்களும் வரையறுக்கப்பட்டுள்ளன.

அரிசி, பருப்பு தானியங்கள், காய்கறிகள், பழங்கள், நார்த்தாவரங்கள் உள்ளிட்ட ஒன்றுடன் ஒன்று நெருக்கமான உறவு கொண்ட 375 வகை தாவரங்களைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. மாடுகள், செம்மறி ஆடுகள், வெப்6ளாடுகள், ஒட்டகங்கள், குதிரைகள், கோழியினங்கள் என 255 வகையான உயிரினங்கள் இந்தியாவில்தான் கண்டறியப்பட்டன என்றார்.

இதில், செயலர் வீ. வைத்தியநாதன், அறங்காவலர் உறுப்பினர்கள் கே.ஆர். குணசேகரன், கே. ரெங்கசாமி, அ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வாரின் இயற்கை விவசாயம், மண்புழுஉரம், திராட்சை ரசம் தயாரித்தல், சித்தமருத்துவம், பாலின் தரம் அறியும் முறை, பச்சைமாசி வளர்ப்பு, ரத்தவகை அறிதல் போன்ற பிரிவுகளில் மாணவிகள் அரங்குகள் அமைத்திருந்தனர். நிகழ்ச்சியில், துணை முதல்வர் மா. குமுதா, செ. விஜயசாமூண்டீஸ்வரி, இரா. கிருஷ்ணவேணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளுக்கு மானியம்**

**திருவாரூர்,**

தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் கைத் தெளிப்பான்கள், இடுபொருள்கள் மற்றும் பொருள்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூர் அருகே அண்மையில் கீரலாத்தூரில் வேளாண்மைத்துறை சார்பில் பயறு வகைப் பயிர்களில் ஒட்டுமொத்த கரைசல் தெளிக்கும் பணியை தொடக்கி வைத்து அவர் மேலும் பேசியது:

உணவு உற்பத்தி இயக்கத்தின் கீழ் மாவட்டத்தில் நடப்பு கோடைப்பருவத்தில் 25 ஆயிரம் ஏக்கரில் நெல், 2 லட்சத்து 71 ஆயிரத்து 750 ஏக்கரில் பயறுவகை பயிர்கள் சாகுபடி பணிகள் நடந்து வருகிறது.

பயறு வகை பயிர்களில் இலை வழி டிஏபி தெளித்தல் முறையில் ஏக்கருக்கு 5 கிலோ டிஏபி உரத்தை 10-15 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து, தெளிந்த கரைசலை எடுத்து 250 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு இலைகளில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.

விதைத்த 25-ம் நாள் பூக்கும் தருணத்திலும், 40-ம் நாள் காய்பிடிக்கும் தருணத்திலும் தெளிப்பதால் பூக்கள் உதிராமல், அனைத்து பூக்களும் காய்களாக மாறுகின்றன. திரட்சியான எடை கூடிய மணிகள் கிடைப்பதால் மகசூல் அதிகரிக்கும். மேலும், இலைகளில் படும் கரைசல் காய்ந்து விடாமல் இலைகளுக்குள் ஊடுருவிச் செல்லும் வகையில் காலை அல்லது மாலை வேளைகளில் மட்டுமே டிஏபி கரைசலை தெளிக்க வேண்டும்.

இதற்குரிய தண்ணீர் எடுத்துச் செல்லும் கருவி, தெளிப்பு நீர்ப்பாசன கருவி, மழைநீர் கருவி ஆகியவை 50 சதவீத மானியத்தில் பெற வேளாண்மை உதவி இயக்குநரை அணுகலாம். மேலும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (பயறு) திட்டத்தின் கீழ் பயிர் பாதுகாப்பு மருந்துகள், கைத் தெளிப்பான்கள், நுண்சத்து முதலிய இடுபொருள்கள் 50 சதவீத மானிய விலையிலும், ரொட்டவேட்டர் ஒன்றுக்கு ரூ. 30,000 மானியம், ஆயில் என்ஜின் ஒன்றுக்கு ரூ. 10,000 மானியம், தார்ப்பாய்கள் 50 சதவீத மானியத்திலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றார்.

வேளாண்மை இணை இயக்குநர் தனசேகரன், துணை இயக்குநர் மயில்வாகனன், உதவி இயக்குநர் சிவக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வைக்கோல் விற்பனை மையம் திறப்பு**

**திருவாரூர்,**

வேப்பஞ்சேரியில் உலர் தீவன (வைக்கோல்) விற்பனை நிலையத்தை வியாழக்கிழமை திறந்து வைத்தார் திருவாரூர் ஆட்சியர் சி. நடராசன்.

நிகழ்ச்சியில் ஆட்சியர் பேசியது:

வறட்சி நிவாரண திட்டதின் கீழ் நீடாமங்கலம், நன்னிலம் ஆகிய இடங்களில் விரைவில் வைக்கோல் விற்பனை மையங்கள் தொடங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழக அரசு அரசு விதைப் பண்ணையிலிருந்து கிலோ வைக்கோல் ரூ. 2-க்கு வழங்கப்படுகிறது. ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் 7 நாட்களுக்கு 21 கிலோ வழங்கப்படும்.

ஒரு குடும்ப அட்டைக்கு 5 மாடுகளுக்கு 21 கிலோ வீதம் அதிகபட்சம் 105 கிலோ வைக்கோல் வழங்கப்படும். இதில் பயன் பெறும் பயனாளி சிறு மற்றும் குறு விவசாயியாக இருக்க வேண்டும். திட்டத்தின்கீழ் பயன் பெற தீவன அட்டை பெற வேண்டும். தீவன அட்டையை தீவன கிடங்கு பொறுப்பு கால்நடை உதவி மருத்துவரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றார் நடராசன்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் க. முகமதுகனி, துணை இயக்குநா தமிழ்ச்செல்வன், வேளாண்மை இணை இயக்குநா0 தனசேகரன், துணை இயக்குநர் க. மயில்வாகனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பிப்ரவரி இறுதியில் பாசனக் கால்வாய்கள் பராமரிக்கும் பணி தொடங்கும்

**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் பாசனக் கால்வாய்கள் பராமரிக்கும் பணி பிப்ரவரி மாத இறுதியில் தொடங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் தெரிவித்தார்.

குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் எஸ்.நாகராஜன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், கடந்த கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர் கூட்டத்தில் ஆட்சியர் பேசியதாவது,

நிகழாண்டில் அரசிடம் முன் அனுமதி பெற்று பாசனக் கால்வாய்கள், மடைகள், ஷட்டர்கள், குளத்தில் உள்ள நீர்க் கசிவுகள் அனைத்தும் பராமரிக்கப்பட்டு தூர்வாரும் பணி பிப்ரவரி இறுதியில் தொடங்கப்படும். இதனால் ஜூன் மாதத்தில்

எவ்வித இடையூறுமின்றி பாசன வசதி அனைவருக்கும் கிடைக்கும் நிலை உருவாகும்.

பறக்கைக்குளம் 1,2,3-லுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி எல்லை நிர்ணயம் செய்யும் பணியை அகஸ்தீசுவரம் வட்டாட்சியர் மேற்கொள்வார். மார்ச் 2 ஆம் தேதி முதல் 11 வரை நடைபெறும் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் விழாவுக்காக பேச்சிப்பாறை அணை நீரை இரணியல் கால்வாய் மூலம் சேரமங்கலம் கிளைக் கால்வாய்க்கு 10 நாள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரணியல் பிரதான நீர்க்கால்வாயில் திருவிதாங்கோடு மற்றும் திங்கள்நகர் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள கழிவுநீர் நேரடியாக கால்வாயில் பாய்வதால் சுகாதாரக்கேடு ஏற்படுகிறது.

இதைத் தடுக்கும் வகையில் கால்வாய்களில் கழிவுநீர் கலக்கும் அனைத்து ஓடைகளையும் அகற்ற பேரூராட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேரூர் குளத்தில் உள்ள 3 மறுகால் ஷட்டர்கள் பராமரிக்கப்படும்.

கருங்கல் சந்தை பகுதியிலிருந்து வரும் கழிவுகள் சானலில் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

வடசேரி ஆம்னி பேருந்துகள் நிறுத்தப்படும் நிலையத்துக்கு எதிரே தனியார் ஹோட்டல் நிர்வாகம் பொதுப்பணித்துறை கால்வாயை 50 மீ. நீளத்துக்கு ஆக்கிரமித்து பாலம்

அமைத்துள்ளது.

இந்த பாலம் விரைவில் இடிக்கப்படும். இரவிபுதூர் கண்ணன் குளப்புறவு விவசாயிகள் பயன்பாட்டிலிருந்த சிறிய பாலம் இடிந்து விழுந்துவிட்டதால், அதனை சரிசெய்ய ரூ.3 லட்சம் ஆகும். முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும் என்றார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் நாகமணிபிள்ளை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) போஸ்லின் வின்ஸ்டன் சாம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியம், கூட்டுறவுச் சங்கங்களின்

இணைப்பதிவாளர் கலைச்செல்வன், விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கப்பன், முருகேசபிள்ளை, மருங்கூர் செல்லப்பா, புலவர் செல்லப்பா, வின்ஸ் ஆன்றோ, திரவியம், தேவதாஸ், சதாசிவம், பழனியாபிள்ளை, பத்மதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**50 பேருக்கு இலவச கறவை மாடுகள்**

**கோவில்பட்டி,**

கோவில்பட்டியை அடுத்த தெற்கு வண்டானத்தில் 50 பயனாளிகளுக்கு இலவச கறவை மாடுகளை கடம்பூர் செ. ராஜு எம்.எல்.ஏ. வெள்ளிக்கிழமை வழங்கினார்.

விழாவுக்கு கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ராமசாமி தலைமை வகித்தார். உதவி இயக்குநர் சந்திரசேகரன் முன்னிலை வகித்தார்.

எம்.எல்.ஏ. கடம்பூர் செ. ராஜு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, 50 பயனாளிகளுக்கு ரூ. 17 லட்சத்து 15ஆயிரம் மதிப்பிலான கறவை மாடுகளை வழங்கிப் பேசினார்.

விழாவில், கால்நடை மருத்துவர்கள் மற்றும் தெற்கு வண்டானம் ஊராட்சித் தலைவர் கனகராஜ், ஒன்றிய ஜெ. பேரவை செயலர் கருப்பசாமி, கோவில்பட்டி நகர முன்னாள் அதிமுக செயலர் விஜயபாண்டியன், மாவட்ட விவசாய அணி துணைச் செயலர் ராமச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர் பாலமுருகன், நகர மாணவரணிச் செயலர் பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**உவரியில் ரூ.63 கோடியில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி தொடக்கம்**

**வள்ளியூர்,**

திருநெல்வேலி மாவட்டம், உவரியில் ரூ. 63 கோடியில் தூண்டில் வளைவு அமைக்கும் பணியை மாநிலங்களவை உறுப்பினர் முத்துக்கருப்பன் வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்தார்.

உவரி கடற்கரைக் கிராமம் கடல் அரிப்பால் மிகவும் பாதிப்படைந்துள்ளது. கடல் அரிப்பு நாளுக்கு நாள் அதிகமானதைத் தொடர்ந்து, குடியிருப்புப் பகுதி மற்றும் கப்பல்மாதா கோயில் பகுதி கடல் அரிப்பால் அதிக அளவில் பாதிப்படைந்தது.

இதனால் இங்குள்ளவர்கள் குடியிருப்பைக் காலி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உவரியில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என கிராம மக்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்தி வந்தனர்.

இது தவிர கடலின் சீற்றம் அதிக அளவில் இருந்துவருவதால், மீனவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்தும் பைபர் படகுகளை கடற்கரையில் நிறுத்திவைக்கவும் முடியாத நிலை ஏற்பட்டு வந்தது.

இதற்கிடையே, கூடங்குளம் அணுஉலை அமைந்துள்ள பகுதியில் ரூ.500 கோடியில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ள தமிழக அரசு அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இந்த நிதியிலிருந்து உவரியில் தூண்டில் வளைவு கட்டப்படும் எனவும் அறிவித்திருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக உவரியில் தூண்டில் வளைவு அமைக்கும் இடம், மகாராஷ்டிர மாநிலம் புணேயில் உள்ள மத்திய நீர் மற்றும் எரிசக்தி ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு இடம் தேர்வு செய்யப்பட்டது. அதன்படி ரூ.63 கோடியில் உவரி கப்பல் மாதா கோயில் பகுதியில் இருந்து 1560 மீட்டர் நீளத்திலும், வடக்குப் பகுதியில் 400 மீட்டர் நீளத்திலும் அலை தடுப்புச் சுவர்கள் கட்டப்பட உள்ளன. மேலும் 800 மீட்டர் நீளத்தில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டப்பட உள்ளது.

இந்தத் தூண்டில் வளைவு அமைக்கும் பணி தொடக்க விழா ராதாபுரம் எம்.எல்.ஏ. மைக்கேல் ராயப்பன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஊராட்சித் தலைவர் பா.நாராயணபெருமாள், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாவட்ட வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ. விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலங்களவை உறுப்பினர் முத்துக்கருப்பன் பணியைத் தொடங்கிவைத்தார்.

**டெல்டாவில் நடமாடும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்**

**கடலூர்,**

கடலூர் மாவட்ட டெல்டா பாசன பகுதிகளில் நடமாடும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 98 ஆயிரத்து 421 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலான பகுதிகளில் நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்முதல் செய்ய ஏதுவாக கடலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே 151 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக விவசாயிகள் பயன் அடையும் வகையில், டெல்டா பாசன பகுதிகளான பரங்கிப்பேட்டை, புவனகிரி, கீரப்பாளையம், காட்டுமன்னார்கோவில் மற்றும் குமராட்சி வட்டாரங்களில் நடமாடும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன.

இதன்படி ஒரே கிராமத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விவசாயிகளிடம் இருந்து அறுவடை செய்து தயார் நிலையில் உள்ள குறைந்தபட்சம் 300 நெல் மூட்டைகள் (40 கிலோ கொள்ளளவு) உள்ள இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நேரடியாக கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தங்கள் கிராமத்தில் அறுவடை செய்து தயார் நிலையில் உள்ள நெல் இருப்பு விவரத்தை தங்கள் அருகாமையில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தெரிவித்து பயன்பெறலாம் என அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கோமாரி நோய் தடுப்பூசிப் பணி: அரசு செயலர் கலந்தாய்வு

**விழுப்புரம்,**

கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி, விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற உள்ளது. இது தொடர்பாக

ஆட்சியருடன் உயரதிகாரிகள் வெள்ளிக்கிழமை காணொளி மூலம் கலந்தாய்வு நடத்தினர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி 1099 ஊராட்சிகளில் நடைபெறுவது குறித்து அரசு செயலர் டாக்டர் எஸ்.விஜயகுமார், கால்நடை பராமரிப்பு, பால் மற்றும் மீன்வளத்துறை இயக்குநர் அ.பழனிச்சாமி ஆகியோர் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத்துடன் இந்தக் கலந்தாய்வில் பங்கேற்றனர்.

இக் காணொளி ஆய்வில் விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் தடுப்பூசி பணி 1,099 ஊராட்சிகளும், 1.3.2014 முதல் 21.3.2014 முடிய 21 தினங்கள் நடைபெற உள்ளது.

கால்நடைத் துறையின் மூலம் நடைபெற உள்ள கோமாரி நோய் தடுப்பூசி பணிக்கான ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கோமாரி நோய் தடுப்பூசி பணிக்கான ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கோமாரி தடுப்பூசி பணி 100 சதவீதம் முழுமையாக எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இக் கூட்டம் நடத்தப்பட்டு அந்தந்த துறையினர் செய்ய வேண்டிய பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். விழுப்புரம் மாவட்டத்தில் 7.5 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட உள்ளது. மாவட்டம் முழுவதும் இதற்காக 143 தடுப்பூசி பணி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குழுவிலும் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர் பணிபுரிவர். இப் பணிக்கு தேவையான வாகன வசதி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு வாகனம் வீதம் வட்டார வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் 22 வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தடுப்பூசி மருந்துகளை குளிர்பதன நிலையில் வைத்திருக்க விழுப்புரம், திண்டிவனம், செஞ்சி, திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி ஆகிய 6 இடங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் குளிர்பதன வசதி செய்யப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு தடுப்பூசி பணி காலை 6 மணி முதல் 9 மணி

வரையிலும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் நடைபெற உள்ளது என்பன போன்ற தகவல்கள் இதில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வின்போது கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் பி.தேவராஜன், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் கி.மகேந்திரன், துணை இயக்குநர் டாக்டர் அப்சல், உதவி இயக்குநர்கள் டாக்டர் குருவையா, டாக்டர் பி.சுந்தர்ராஜன், டாக்டர் ராஜேந்திரன்

உள்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**11வது ஐந்தாண்டு கால திட்டத்தில் 8 சதவீத பொருளாதார வளர்ச்சி**

**புதுடில்லி:** 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007 2012), நாட்டின் பொருளாதார வளர்ச்சி, ஆண்டுக்கு சராசரியாக, 8 சதவீதமாக இருந்தது என, மத்திய திட்ட அமைச்சர் ராஜீவ் சுக்லா, பார்லிமென்டில் தெரிவித்தார். இதுகுறித்து, அவர் மேலும் கூறியதாவது: 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், 9 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட, இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், சர்வதேச நாடுகளின் பொருளாதார சுணக்க நிலை, பணவீக்கம் அதிகமாக இருந்தது மற்றும் வறட்சியால், வேளாண் உற்பத்தி பின்னடைவு போன்ற காரணங்களால், 8 சதவீத வளர்ச்சி மட்டுமே எட்டப்பட்டு உள்ளது. மதிப்பீட்டிற்க்கான ஐந்தாண்டு திட்ட காலத்தில், வேளாண் துறையில், 4 சதவீத வளர்ச்சி காண, இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், 3.7 சதவீதம் மட்டுமே எட்டப்பட்டுள்ளது. சேவை துறை இலக்கில் (9 11 சதவீதம்), 9.7 சதவீதம் மட்டுமே வளர்ச்சி காண முடிந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், மத்திய அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, அதிக முதலீட்டிலான அடிப்படை கட்டமைப்பு திட்டங்களை, துரித கதியில் செயல்படுத்த, முக்கிய அமைச்சரவை குழு முனைந்துள்ளது. இவ்வாறு, ராஜீவ் சுக்லா தெரிவித்தார்.

**கோடை மழை இயல்பை அறிய அரபிக்கடலில் துளையிடப்படுகிறது : பூமி அறிவியல் செயலர் சைலேஷ் நாயக் தகவல்**

**சென்னை:** இந்தியாவில், கோடை மழையின் இயல்பை அறிய, இமயமலையின் படிமங்கள் நிறைந்த பகுதியான, அரபிக்கடலில், துளையிட்டு ஆய்வு செய்யும் பணி, அடுத்தாண்டு, மார்ச் மாதத்திற்குப் பின் துவங்கும்," என, மத்திய, பூமி அறிவியல் துறையின் செயலர், சைலேஷ் நாயக் தெரிவித்தார்.இந்திய வானிலை சங்கம் மற்றும் எஸ்.ஆர்.எம்., பல்கலை சார்பில், பருவமழை, கண்காணிப்பு, கணிப்பு மற்றும் போலி நிகழ்வு குறித்த, சர்வதேச கருத்தரங்கு, பல்கலை வளாகத்தில் நேற்று துவங்கியது. நான்கு நாட்கள் நடக்கும் இக்கருத்தரங்கை துவக்கி வைத்து, சைலேஷ் நாயக் பேசியதாவது:இந்தியாவில் பெய்யும் கோடை மழையானது, விவசாயம், நீர் ஆதாரங்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தையே பாதித்து வருகிறது. கோடை மழையில் நிகழும் மிகப்பெரிய மாற்றமானது, பெருவெள்ளத்தையும், வறட்சியையும் ஏற்படுத்துகிறது. கோடை மழைக்கும், இமய மலையின் வளர்ச்சிக்கும் தொடர்புண்டு. 25 ஆயிரம் ஆண்டுகளுக்குரிய, மழை பொழிவின் வரலாறு, வண்டல் படிமங்கள் மூலம் கிடைக்கின்றன. பழைய வரலாறு அடிப்படையில், இனி வரும், காலங்களில் பருவமழையின் இயல்பை கணிக்கலாம். இந்திய பெருங்கடல் ஆழ்கடல் துளையிடும் திட்டத்தின்படி, அரபிக் கடலில், 2015ல், லட்சுமி பேசின் பகுதியில் துளையிட்டு, அதில் கிடைக்கும் படிமங்கள் கொண்டு ஆய்வு நடத்தப்படும்.பருவகால மாற்றம் குறித்து ஆய்வு செய்ய, இளம் அறிவியலாளர்கள் தேவைப்படுகின்றனர். புவி வெப்பமடைதல் காரணமாக, குடிநீர் பாதுகாப்பு தொடர்ந்து, கேள்விக்குறியாகி வருகிறது.

எனவே, சரியான பருவமழை கணிப்புகள் என்பது, தற்போதைய முக்கிய தேவை. இவ்வாறு, அவர் பேசினார். நிகழ்வில், பல்கலை துணைவேந்தர் பொன்னவைக்கோ, தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் ஸ்ரீதர், இந்திய வானிலை ஆய்வுமைய இயக்குனர் ஜெனரல் ரத்தோர், இணை இயக்குனர் ராஜ் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சி முடிவில், பத்திரிகையாளர்கள் சந்திப்பில், சைலேஷ் நாயக்,"" பருவமழையின் வரலாறை அறியும் வகையில், 2015 மார்ச் மாதத்திற்குப் பின், மும்பைக்கு அருகில், அரபிக்கடலில், "சாகர் நிதி' கப்பல் மூலம், கடலுக்கு அடியில், படிமங்கள் துளையிட்டு எடுக்கப்படும்," என்றார்.

## வாழை நாரில் இருந்து சேலை தயாரிக்கும் தொழிற்சாலை : தேனியில் அமைக்க ஆய்வு

**தேனி:** வாழை நாரில் இருந்து, சேலை தயாரிக்கும் தொழிற்சாலையை, தேனி மாவட்டத்தில் அமைக்க, இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பு, ஆய்வு செய்துள்ளது. தேனி மாவட்டத்தில், ஆண்டு முழுவதும் பல ஆயிரம் எக்டேரில் வாழை சாகுபடி நடக்கிறது. இங்கு கிடைக்கும், வாழைத்தார் தரத்திலும் உலகளவில் முதலிடத்தை பெற்றுள்ளது. டில்லியில் நடந்த, இந்திய விவசாய கண்காட்சியில், தேனியில் விளைந்த வாழைத்தார் இடம் பெற்று, அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இதையடுத்து, இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பினர், தேனி மாவட்டத்தில் ஆய்வு செய்தனர். இங்கு, தரமான வாழை விளைவதால், இதன் நாரில் இருந்து சேலை, துணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதேபோல், வாழைப்பழ பவுடர், தேன், ஜாம், அல்வா, பார், மிட்டாய், சிப்ஸ், ஸ்டார்ச், வாழை ஊறுகாய், வாழை பூ தொக்கு, அழியாத மை தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைக்கவும், முடிவு செய்யப்பட்டது.வாழைத்தாரை தாங்கி நிற்கும் தண்டு, அணு உலைக்கழிவுகளான காரீயம், பாதரசம், ஸ்டோனியம் போன்ற நேரடி நச்சுக்களில் இருந்து வெளிப்படும் கதிரியக்கத்தை கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. எனவே, அணு ஆலை கழிவுகளை பாதுகாக்கும் மூலப்பொருட்களும், வாழைத்தண்டில் இருந்து தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கேற்ப வாழைப்பழ சாகுபடி பரப்பை 30 ஆயிரம் எக்டேருக்கும் மேல் அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## வறட்சி நிவாரணத்தை அரசு வழங்காது : இன்சூரன்ஸ் நிறுவனங்களே பொறுப்பு

**திண்டுக்கல்:** வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு, இன்சூரன்ஸ் நிறுவனங்களிடம் இருந்து முழு நிவாரணம் பெற, ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது. இயற்கை இடர்பாடுகளால் வறட்சியும், வெள்ளத்தால் பாதிப்பும் ஏற்படும்போது, விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க, மத்திய, மாநில அரசுகள் நிவாரணம் வழங்கி வந்தன. இது தவிர, பயிர் காப்பீடு திட்டமும் செயல்படுத்தப்பட்டிருந்தது. காப்பீடு திட்டத்தில் உறுப்பினராக சேரும் விவசாயிகளிடமிருந்து, ஏக்கருக்கு 2 சதவீதம் பிரீமியம் வசூலிக்கப்பட்டது. இதில் ஒரு சதவீதத்தை, விவசாயியும், மற்றொரு சதவீதத்தை அரசும், செலுத்தி வந்தன. இனிமேல், வறட்சி நிவாரணத்தை முழுமையாக இன்சூரன்ஸ்

நிறுவனங்களே ஏற்றுக்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.அந்தந்த மாவட்டங்களுக்கேற்ப பிரீமியம் தொகையை நிர்ணயிக்கும் உரிமை இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு, ஏக்கருக்கு பிரிமியம் தொகையாக ரூ. 45 செலுத்திய விவசாயிகள், புதிய திட்டத்தின்கீழ், இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு ரூ. 450 வரை செலுத்த வேண்டும். வறட்சி பாதிப்பு குறித்து, அந்தந்த மாவட்ட வருவாய் துறை அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில், முழு நிவாரணத்தை இன்சூரன்ஸ் நிறுவனங்கள் விவசாயிகளுக்கு அளிக்கும். இதனால், தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்படுவதோடு, உரிய காலத்திற்குள் நிவாரணத்தை விவசாயிகள் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பட்டினியை தவிர்க்க இன்று மீன்பிடிக்க செல்லும் விசைப்படகு மீனவர்கள்**

**மண்டபம்:** இரு நாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தைக்காக இலங்கை மீனவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, ஒரு வாரமாக மீன்பிடிக்க செல்லாத ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் விசைப்படகு மீனவர்கள், குடும்ப செலவுக்காக, இன்று மீன்பிடிக் க செல்ல முடிவு செய்துள்ளனர். கொழும்புவில் இலங்கை, இந்திய மீனவர்களின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை அடுத்த மாதம் நடக்க உள்ளது. அதுவரை மீன்பிடிக்க செல்லக்கூடாது என இலங்கை மீனவர்கள் கோரிக்கைக்கு ஏற்ப ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம்  விசைப்படகு மீனவர்கள், பிப்.,15 ம் தேதி முதல் மீன்பிடிக்க கடலுக்குச்செல்லவில்லை. இந்நிலையில் குடும்ப நடத்த செலவுக்காக, மண்டபம் பகுதி விசைப்படகு மீனவர்கள், இன்று மீன்பிடிக்க செல்கின்றனர்.

அனைத்து விசைப்படகு மீனவர் சங்க செயலாளர் பாலசுப்பிரமணியன்: சர்வதேச கடல் எல்லையை தாண்ட வேண்டாம். நமது பகுதியில் மட்டும் மீன் பிடிக்க வேண்டும். இலங்கையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை சுமூகமாக முடிவதற்கு, மீனவர்கள் ஒத்துழைக்க வேண்டும். மேலும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தக்கூடாது என அறிவுறுத்தி உள்ளோம், என்றார்.

## வலையில் சிக்கிய மயில் மீன்



**ராமேஸ்வரம்**: பாம்பன் நாட்டுப்படகு மீனவர் வலையில், அரியவகை மயில் மீன் சிக்கியது. அதை, ரூ.1824க்கு வாங்கிய வியாபாரிகள், கேரளாவுக்கு அனுப்பினர். பாம்பனில் இருந்து, பிப்., 15 ல் டாஸ்டன் என்பவரது நாட்டுப்படகில், மீன்பிடிக்க சென்ற மீனவர்கள், 5 நாட்கள் கடலில் தங்கி, மீன்பிடித்து விட்டு நேற்று கரை திரும்பினர். இவர்களது வலையில் 32 கிலோ எடையில், அரியவகை மயில் மீன் சிக்கியது. இதை வாங்க வியாபாரிகளிடையே போட்டி நிலவியது. ஒரு கிலோ ரூ.57 வீதம், 1824 ரூபாய்க்கு வாங்கினர்.

மீன் வியாபாரி ஒருவர் கூறுகையில், "அதிக ருசி கொண்ட இம்மீன், சிக்குவது அரிது, என்றார்.

## வறட்சியால் காயும் கொய்யா மரங்கள்

**பழநி:** திண்டுக்கல் மாவட்டம் ஆயக்குடி பகுதியில், ஆண்டுமுழுவதும் விளையும் கொய்யா, கடும் வறட்சிகாரணமாக, விளைச்சல் குறைந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழநி அருகே ஆயக்குடி, கணக்கன்பட்டி, கோம்பைபட்டி, சட்டப்பாறை, டி.கே.என்.புதுார், அமரப்பூண்டி உட்பட கிராமப்பகுதியில், பல ஏக்கர் பரப்பளவில், லக்னோ- 49, ஆந்திரலக்னோ போன்ற ரக கொய்யா பழங்கள் அதிகளவில் விளைவிக்கப்பட்டு, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்கும், வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. இப்பகுதியில், கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, வறட்சி ஏற்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. தற்போது 1000 அடி ஆழம் வரை "போர்வெல்' அமைத்தும், தண்ணீர் கிடைக்காததால், கொய்யா

மரங்கள் காய்ந்து வருகின்றன.இதனால், விளைச்சல் குறைந்து, கடந்த மாதம் கிலோ ரூ. 40 க்கு விற்பனையான கொய்யாப்பழம், தற்போது, உள்ளூர் சந்தையில் ரூ.50 க்கும், பொள்ளாச்சி, கோவை போன்ற வெளியூர் பகுதிகளில் கிலோ ரூ.80 க்கும் விற்கப்படுகிறது. விவசாயி கருப்புசாமி கூறியதாவது: 3 ஏக்கரில், பெரியகுளம் பகுதியிலிருந்து கொய்யாச்செடிகள் வாங்கி, நடவு செய்தேன். தற்போது, கிணற்றில் தண்ணீர் இல்லை. புதிய "போர்வெல்' அமைத்தும் தண்ணீர் கிடைக்காததால், செடிகள் காய்ந்து விட்டது. இதற்காக, 5 லட்சம் ரூபாய் வரை செலவு செய்தும் பயனில்லை, என்றார்.

## உணவு பாதுகாப்புத் திட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு

**பெ.நா.பாளையம்:**தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில், விவசாயிகள் தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு பெரியநாயக்கன்பாளையம் வட்டார வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது.புரதம் அதிகமுள்ள பயிறு வகை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த உர நிர்வாக திட்டத்தில் மானிய விலையில் நுண்ணுாட்ட உரங்கள் வழங்கப்படுகின்றன.இதேபோல, மானிய விலையில் இடுபொருட்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு திட்டத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள், களைக்கொல்லி மருந்துகள், கைத் தெளிப்பான் ஆகியவை வழங்கப்படுகின்றன. 30 விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. சிறுதானியங்கள்,பயிறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி, கரும்பு, தென்னை பயிரிடும் விவசாயிகள் தங்கள்பெயர், முகவரி, மற்றும் இதர விபரங்களை வேளாண் துறையில் பதிவு செய்து, ஒருங்கிணைந்த விவசாய கையேடு பெற்று அனைத்து திட்ட மானியங்களும் பெற்று பயன் அடையலாம்.

இத்தகவலை பெரியநாயக்கன்பாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ஷபி அகமது தெரிவித்தார்.

## கெடிலம் ஆற்றில் ஆலைக்கழிவுகள் விடுவது தடுக்கப்படுமா:கடலூரில் நிலத்தடி நீர் மாசுபடும் ஆபத்து

**கடலூர்:**கடலூரில், கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீரை உவர் தன்மையாக மாறுவதைத் தடுத்திட உலக வங்கி நிதியுதவியுடன் 16 கோடி ரூபாய் செலவில் தடுப்பணை கட்ட டெண்டர் விடப்பட்டு பணிகள் துவங்க உள்ளது. இந்நிலையில், தொடர்ந்து ஆற்றில் கழிவு நீர் வெளியேற்றப்பட்டு வருவதால், நிலத்தடி நீர் மேலும் மாசுபடும் ஆபத்து உருவாகியுள்ளது.

கர்நாடக மாநிலம் நந்திதுர்காவில் உருவாகும் தென்பெண்ணையாறு மற்றும் விழுப்புரம் மாவட்டம், மையனூர் வனப்பகுதியில் உள்ள கருடாழ்வார் மலையிலிருந்து உருவாகும் கெடிலம் ஆறு பல ஊர்களைக் கடந்து இறுதியாக, கடலூரில் உள்ள வங்கக் கடலில் சங்கமிக்கின்றன.இரண்டு ஆறுகளிலும் மழைக்காலங்களில் மழைநீர் பெருக்கெடுத்து வந்த காரணத்தினால், கடலூரில் நிலத்தடி நீர் வளம் மிகுந்திருந்தது. தண்ணீர் சுவையாகவும் இருந்தது. இதன் காரணமாக, நகராட்சி நிர்வாகம், பெண்ணையாற்றங்கரையில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மக்களுக்கு குடிநீர் வினியோகித்து வந்தது.மக்கள் தொகை பெருக்கம், விவசாய அபிவிருத்தி காரணமாக நிலத்தடி நீர் பயன்பாடு அதிகரித்த நிலையில், போதிய மழையில்லாத காரணத்தால் பெரும்பாலான நாட்கள் வறட்சி காணப்படும். இந்த இரண்டு ஆறுகளிலும், தொடர்ந்து மணல் அள்ளப்பட்டு வருவதால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருவதோடு, கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் உவர் தன்மையாகி வருகிறது.இதனைத் தவிர்க்க கெடிலம் மற்றும் பெண்ணையாறுகளில் தடுப்பணை கட்ட வேண்டும் என பல்வேறு அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்தன.

அதனையேற்ற மாவட்ட நிர்வாகம், நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும், கடல் நீர் உட்புகுவதை தடுத்திடும் வகையில் மாவட்டத்தில் ஓடும் ஆறுகள் மற்றும் ஓடைகளில் 37 இடங்களில் தடுப்பணை கட்ட பொதுப்பணித்துறை மூலம் திட்ட மதிப்பீடு தயாரித்து அரசுக்கு பரிந்துரை செய்தது.அதனையேற்ற தமிழக அரசு, உலக வங்கி நிதியுதவியுடன் முதல் கட்டமாக 16 கோடி ரூபாய் செலவில் கடலூர், கூத்தப்பாக்கத்தில் கெடிலம் ஆற்றின் குறுக்கே 250 மீட்டர் நீளம், 5 அடி அகலம், 2 மீட்டர் உயரத்தில் தடுப்பணை கட்ட கடந்த மாதம் டெண்டர் விடப்பட்டுள்ளது.இதனால், இந்த பணி ஓரிரு மாதங்களில் துவங்கப்பட உள்ளது. இந்நிலையில், கெடிலம் ஆற்றில், நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக் கழிவுநீர்

மற்றும் நகராட்சி கழிவுநீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகிறது.தடுப்பணை கட்டினால், இந்த கழிவுநீர் தேங்கி நின்று நிலத்தடி நீரை முற்றுலுமாக மாசுபடும் நிலை உள்ளது. அதனால், தடுப்பணை கட்டுவதற்கு முன்பாக, கெடிலம் ஆற்றில் கழிவு நீர் வெளியேற்றுவதை தடுக்க மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதனை வலியுறுத்தி அனைத்து குடியிருப்போர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

## ஒரே ஆண்டில் ரூ.10 கோடி கடலோடு போச்சு:வெள்ளாற்று முகத்துவாரத்திற்கு தீர்வு தேவை

**பரங்கிப்பேட்டை:**பரங்கிப்பேட்டை அருகே வெள்ளாற்று முகத்துவாரம் ஆழப்படுத்தி ஒரே ஆண்டிலேயே நேற்று மீண்டும் தூர்ந்து போனதால் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களின் விசைப்படகுகள், லம்பாடி இன்ஜின் பொருத்திய படகுகள் கரைக்குத் திரும்பின. முகத்துவாரத்தை நிரந்தரமாக ஆழப்படுத்தக் கோரி 30 கிராம மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பரங்கிப்பேட்டை வெள்ளாற்று முகத்துவாரத்தின் வழியாக பரங்கிப்பேட்டை, புதுக்குப்பம், புதுப்பேட்டை, சாமியார்பேட்டை, சின்னூர், முடசல்ஓடை, கிள்ளை, பில்லுமேடு, எம்.ஜி.ஆர்., திட்டு உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வருகின்றனர்.வெள்ளாற்று முகத்துவாரம் அடிக்கடி தூர்ந்து போனதால் கடந்த ஆண்டு அரசு சார்பில் 10 கோடி ரூபாய் மதிப்பில் முகத்துவாரம் ஆழப்படுத்தப்பட்டது.இருந்தும் கடந்த ஆறு மாதத்திற்கு முன் தூர்ந்து போனதால் கிள்ளை, பரங்கிப்பேட்டை கடற்கரையோர மீனவர்கள் விசைப் படகுகளில் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் பாதிக்கப்பட்டனர்.வெள்ளாற்று முகத்துவாரத்தில் தண்ணீர் நீரோட்டம் அதிகமாக இருக்கும் நேரங்களில் விசைப்படகுகள் உள்ளிட்ட அனைத்து படகுகளும் கடலுக்குச் சென்று மீன் பிடித்து வந்தன. சில நேரங்களில் கடலில் இருந்து மீன் பிடித்துவிட்டு கரைக்குத் திரும்பி வரும் போது முகத்துவாரத்தில் படகுகள் சிக்கிக்கொள்வது வாடிக்கையாக இருந்து வருகிறது.இந்நிலையில், நேற்று மீண்டும் வெள்ளாற்று முகத்துவாரம் முற்றிலுமாக தூர்ந்தது. இதனால், பரங்கிப்பேட்டை கடற்கரையோர மீனவர்கள் யாரும் மீன் பிடிக்கச் செல்லவில்லை. தற்போது லம்பாடி இன்ஜின் பொருத்திய படகுகளில் சென்று மீன்

பிடித்து வந்தனர்.இதுகுறித்து மீனவர் செழியன் கூறுகையில், "முகத்துவாரம் நிரந்தரமாக ஆழப்படுத்தப்பட்டும் ஒரே ஆண்டில் நேற்று மீண்டும் தூர்ந்ததால், கடலுக்கு மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் கரை திரும்பினர்.இங்கிருந்து தினமும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு 100 டன் மீன் ஏற்றுமதி செய்யப்படுவதால் இந்த பகுதியைச் சேர்ந்த 1,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனை நம்பி வாழ்ந்து வருகின்றன.அடிக்கடி முகத்துவாரம் தூர்ந்து @பாவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கிறது. இதனால் அரசு, மீனவர்களின் நலன் கருதி நிரந்தரமாக ஆழப்படுத்தி தரவேண்டும்' என்றார்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு கணினி பயிற்சி

**விருத்தாசலம்:**விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 28ம் தேதி கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு கணினி பயிற்சி நடக்கிறது.விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் வேளாண்மையில் கணினி உபயோகம், வேளாண் தொடர்பான இணைய தளங்களை உபயோகித்தல், வேளாண் விற்பனை பொருட்களின் சந்தை நிலவரத்தை அறிதல் தொடர்பாக விவசாயிகளுக்கு வரும் 28ம் @ததி ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.பயிற்சியில் பங்@கற்க விரும்பு@வார் வரும் 25ம் தேதிக்குள் பெயர், ஊர் உள்ளிட்ட விவரங்களை பதிவு öŒ#து கொள்ள @வண்டும். அல்லது கடலூர் சாலையிலுள்ள, வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரிலோ அல்லது 04143- 238353, 9944087028 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என நிலையத் தலைவர் அருணாச்சலம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## விவசாயத்திற்கு உதவும் 'சோலார் பம்ப் செட்'

**மதுரை:** சென்னை எம்.பி.சி., எனர்ஜி நிறுவனம் சார்பில், மதுரையில் முதன்முறையாக, விவசாயத்திற்கு உதவும் வகையில், 'சோலார் பம்ப் செட்' பொருத்தப்பட்டுள்ளது.மதுரை பொட்டப்பாளையம், மேலவெள்ளூர் கிராம விவசாயி, குமார் யாதவ். இவரது பத்து ஏக்கர் நிலத்தில் தென்னை, வாழையும், காய்கறிப் பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஐந்து எச்.பி., திறனுள்ள 'சோலார் பம்ப் செட்' மூலம், தோட்டத்தின் தண்ணீர்த் தேவை ஈடுகட்டப்படுகிறது. காலை 8 முதல் மாலை 5 மணி வரை சூரிய வெளிச்சம் இருக்கும் போது, 'பம்ப் செட்' தொடர்ந்து இயங்கும். அந்த நேரத்தில், பயிர்களுக்கு தண்ணீர் ஊற்றலாம்.

கருவிகள் வாங்குவதற்கு 95662 89648 / 98940 09480 எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

## மேலூரில் 50 ஆண்டுகளாக கைகொடுக்கும் கிணற்று பாசனம்: வறட்சியிலும் சாதிக்கும் விவசாயிகள்

**மேலூர்:** மதுரையே வறட்சியில் 'தத்தளித்து' கொண்டிருக்கும் நிலையில், மேலூர் தெற்குதெருவில் 50 ஆண்டுகளாக கிணற்று பாசனத்தில் விவசாயம் செய்து சாதித்து வருகின்றனர் விவசாயிகள்.

மேலூர் பகுதியில் தண்ணீரின்றி பயிர்கள் கருகிய நிலையில், வைகையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. பின், ஓரளவிற்கு விவசாய நிலங்கள் மீண்டும் உயிர் பெற்றன. ஆனால், தெற்கு தெருவில் உள்ள விவசாய நிலங்கள் 50 ஆண்டுகளாக வறண்டதே இல்லை என்று, சொன்னால் நம்ப முடிகிறதா. கிணற்று பாசனம் இப்பகுதி விவசாயிகளுக்கு காலம் காலமாய் கை கொடுத்து வருவதால், பெரியார் பாசன கால்வாயிலிருந்து வரும் பாசன நீர் தடைப்பட்டும், தடையில்லாமல் சிலர் நெல் பயிரிட்டு வருகின்றனர்.விவசாயி மோகன் கூறியதாவது: கூட்டம்புலி கண்மாயிருந்து வரும் நீர், பவுர்ணமுனங்கு வந்து பின், தெற்குத்தெரு வாய்க்காலில் சேரும். வாய்க்கால் பாதை முழுவதும் 'பிளாட்டு'கள் போட்டு அடைத்துவிட்டதால், விவசாயம் பாதிகப்பட்டது. இருந்தும், கிணற்று பாசனத்தால் அதிக மகசூல் கிடைத்து வந்தது. பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில், பலன் தந்த நிலங்களை விவசாயிகள் 'பிளாட்'டுகளுக்கு விட்டு கொடுத்து விற்றுவிட்டனர்.இப்படியே போனால் விவசாயம் முற்றிலுமாக அழிந்துவிடும். என்னுடைய 5 ஏக்கர் நிலத்தில் ஜெ.சி.எல்., ரக நெல் பயிரிட்டுள்ளோம், ஒரு அறுவடைக்கு 35 மூடை கிடைக்கிறது. அடுத்தடுத்து நிலத்தை உழுது நல்ல விளைச்சலை எடுத்து வருகிறேன். நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருப்பதால், கிணற்று நீர் அளவில்லாமல் கிடைக்கிறது. அதை விவசாயத்திற்கு பயன்படுத்தி அழிந்து வரும் நிலங்களை காப்பாற்ற விவசாயிகள் முன்வர வேண்டும், என்றார்.

## கோமாரி நோய் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பயிற்சி கூட்டம்

**ஈரோடு:** ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில், தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்ட விழிப்புணர்வு பயிற்சி கூட்டம், கலெக்டர் சண்முகம் தலைமையில் நடந்தது.

கால்நடைகளுக்கு வாய் கோமாரி நோய் அதிகம் தாக்கி, கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தியது. இந்நோயால், கறவை மாட்டில் பால் உற்பத்தி குறைந்து, சினை பிடிப்பு தடைபட்டு, எருதுகளின் வேலைத்திறன் குறைந்தது. இளங்கன்றுகளின் இறப்பு சதவீதம் உயரும். பருவநிலை மாற்றத்தால், தமிழகம் முழுவதும் ஆங்காங்கே, கோமாரி நோய் தாக்கி, அதன் இறப்பு சதவீதம் அதிகரித்தது.

அதனை கருத்தில் கொண்டு, தமிழக அரசின் கால்நடைபராமரிப்பு துறை சார்பில் அரை ஆண்டுக்கு ஒருமுறை, கோமாரி நோய் தடுப்பூசிகள் லட்சகணக்கில் அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி நடப்பு, மார்ச் வாரத்தில், கால்நடை துறை சார்பில், பஞ்சாயத்துக்கள் வாரியாக, கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது. இதற்காக கால்நடை துறையால், மொத்தம், 3.70 லட்சம் தடுப்பூசிகள் வரப்பெற்றுள்ளது.இதை கொண்டு, மொத்தம், மூன்று லட்சத்து, 66 ஆயிரத்து, 290, பசுவினம் மற்றும் எருமை இனங்களுக்கு ஊசி போட உள்ளனர். இதற்காக, துறை ரீதியாக மொத்தம், 132 குழுக்கள், தினமும், 17 ஆயிரத்து, 442 கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போட உள்ளனர்.

இதற்காக, தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ், கலெக்டர் சண்முகம் தலைமையில், பஞ்சாயத்து தலைவர்கள், செயலாளர்கள், வி.ஏ.ஓ.,களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம், ஈரோட்டில் நடந்தது.

கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் ஜெயராமன், துணை இயக்குனர் பிரகாசம் உட்பட பலர் பேசினர். கால்நடை உதவி மருத்துவர்கள் டாக்டர் சென்ராயன், மோகனப்பிரியா, வெங்கடாசலம் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சத்தி விற்பனை சங்கத்துக்கு வாழை வரத்து அதிகரிப்பு

**சத்தியமங்கலம்:** சத்தியமங்கலம் பகுதியில், கடந்த மாதம் முதல், வறட்சி துவங்கியதால், ஏலத்துக்கு வந்த வாழை தார்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சத்தியமங்கலம் பகுதியில் விளைந்த வாழைத்தார்களை, விவசாயிகள் சிலர், மொத்த வியாபாரிகள் மற்றும் சிறு வியாபாரிகளிடம் விற்பனை செய்வர். பெரும்பாலான விவசாயிகள், சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ள தொடக்க வேளாண்மை உற்பத்தியளார்கள் கூட்டுறவு சங்கத்துக்கு ஏலம் முறையில், விற்பனை செய்ய கொண்டு வருவார்கள்.

தற்போது சத்தியமங்கலம் பகுதியில், கடும் வறட்சி தொடங்கியுள்ளது. இதனால்,

சிறு வியாபாரிகள் வாழைத்தார் வாங்குவதை நிறுத்திவிட்டனர். இவர்கள், தர்பூசணி மற்றும் வெள்ளரிக்காய் வாங்கி, விற்க தொடங்கியுள்ளனர். இதனால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்துக்கு வரும் வாழைத்தார்களின் எண்ணிக்கை, நேற்று அதிகரித்தது.

சத்தியமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில் கதளி கிலோ, 28.10 ரூபாய்க்கும், நேந்திரம், 18.10 ரூபாய்க்கும், செவ்வாழை தார் ஒன்று, 500 ரூபாய் முதல், 700 ரூபாய் வரைக்கும் விற்பனை ஆனது.நேற்று, கிலோ கணக்கில் விற்கும் வாழை, 20 டன்னும், தார் கணக்கில் விற்கும் வாழை, 3,000 தார்களும் விற்பனைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

### அறுவடை பணிகள் நிறைவு வாத்து கூட்டங்கள் ஆஜர்

**சத்தியமங்கலம்:** சத்தியமங்கலம் பகுதியில், நெற்பயிர் அறுவடை நிறைவடைந்த வயல்வெளிகளில், வாத்து கூட்டங்கள் முற்றுகையிட்டுள்ளன.

சத்தியமங்கலம் அடுத்துள்ள பவானிசாகர் அணையில் இருந்து, கடந்த ஆகஸ்ட் மாதம், பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. கீழ்பவானி வாய்க்கால், ஒற்றை மதகு பாசன விவசாயிகள், தங்கள் வயல்வெளிகளில் நெல் பயிரிட்டிருந்தனர்.

சத்தியமங்கலம் சுற்றுப்பகுதியில் மட்டும், பத்தாயிரம் ஏக்கர் பரப்பரளவில் நெற்பயிர் நடவு செய்யப்பட்டு, 90 விழுக்காடு, அ றுவடை முடிந்துவிட்டது.

இந்நிலையில், அறுவடை செய்யப்பட்ட வயல்வெளிகளில், சிதறி கிடக்கும் நெல்மணிகளை சாப்பிட, வேலூரில் இருந்து வாத்து கூட்டங்கள், இப்பகுதிக்கு வந்துள்ளன.

ஒவ்வொரு கூட்டத்திலும், 2,000 முதல், 3,000 வரை வாத்துக்கள் உள்ளது. பத்துக்கும் மேற்பட்ட கூட்டம், இப்பகுதிக்கு வந்துள்ளதால் அறுவடை செய்யப்பட்ட நெல்வயல்கள் முழுவதும், வாத்துக்கள் ஆக்கிரமித்துள்ளன.

இது குறித்து வாத்து உரிமையாளர்கள் கூறியதாவது: தற்போது, வேலூர் பகுதியில், வறட்சி ஏற்பட்டுள்ளது. சத்தியமங்கலம் பகுதியில், வாத்துக்களுக்கு தேவையான நெல்மணிகள் அதிகம் கிடைக்கும் நிலை உள்ளதால், இங்கு இடம் பெயர்ந்துள்ளோம். தற்போது உள்ள வாத்துக்கள், மூன்று மாதங்கள் வயது கொண்டதாகும். இன்னும், நான்கு மாதங்கள் இதை மேய்த்தால், ஒரு வாத்து, 250 ரூபாய்க்கு, கேரளா வியபாரிகள் வாங்கி சென்றுவிடுவார்கள், என்றனர்.

## கேரளாவுக்கு கடத்திய மாடுகள் பறிமுதல்

**நாகர்கோவில் :** குமரி மாவட்டம் உள்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாடுகளை குறைந்த விலைக்கு வாங்கி அடிமாடுகளாக கேரளாவுக்கு கடத்துவது தொடர்ந்து நடந்து வருகிறது. இவ்வாறு கடத்தப்படும் மாடுகளுக்கு உணவு, தண்ணீர் கொடுக்காமல், கட்டிப்போட்டு, காயப்படுத்தி , வாகனங்களில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் ஏற்றி சித்தரவதை செய்து கொண்டு செல்கிறார்கள். படந்தாலுமூடு, குறித்துறை பகுதிகளில் மாட்டுச்சந்தை செயல்படுகிறது. சமீபத்தில் கோமாரி நோய் பீதியால் சந்தைகள் மூடப்பட்ட நிலையிலும் இந்த பகுதியில் மாடு விற்பனை நடந்தது. நேற்று படந்தாலு மூட்டில் இருந்து உயிருக்கு பேராடிக்கொண்டிருந்த நிலையில் 3 மாடுகளை ஒரு லோடு ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு சென்றனர். ஒரு மாடு படுத்திருக்க மற்ற மாடுகளை அதன்மீது ஏற்றி சித்தரவதைக்கு உட்படுத்தி கொண்டு சென்றனர்.
களியக்காவிளை கோழிவிளை சோதனைசாவடியில் போலீசார் அந்த ஆட்டோவை தடுத்து நிறுத்தி பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட ஆட்டோ மற்றும் மாடுகள் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு செல்லப்பட்டன.

## வறட்சியில் தவிக்கும் பயிர்களுக்கு...உதவிக்கரம்!நுண்ணுயிர் திரவம் கை கொடுக்கிறது

**பொள்ளாச்சி**:வறட்சியினால் நிலவும்பாசனப்பற்றாக்குறையில் கருகும் பயிர்களை காக்க, வேளாண் விஞ்ஞானிகள்நுண்ணுயிர் திரவம் ஒன்றைகண்டறிந்துள்ளனர்.
கடந்த சில ஆண்டுகளாக, தமிழகம் எங்கும் மழைப்பற்றாக்குறையால் வறட்சி நிலவி வருகிறது. இதனால், பயிர்களுக்கு தேவையான அளவு பாசனம் அளிக்க முடியாமல், பயிர்கள் கருகி வருகின்றன. குறிப்பிட்ட பருவத்தில் பயிர்களுக்கு பாசனம் அளிக்காவிட்டால், மகசூலும் குறைந்துவிடும். இதனால் ஏற்படும் இழப்புகளால் தமிழக விவசாயிகள் கலங்கி போயுள்ளனர். பல விவசாயிகள், விவசாயத்தை கைவிடும் அளவுக்கு வறட்சியின் கோரப்பிடி இருந்து வருகிறது. தற்போது கோடைக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், தண்ணீர் பற்றாக்குறை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வல்லுனர்கள் எச்சரிக்கின்றனர்.
இதற்கு தீர்வு காணும் நோக்கில், மதுரை வேளாண் பல்கலை விஞ்ஞானிகள், நுண்ணுயிர் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.பாக்டீரியா வகை நுண்ணுயிரான இதற்கு, 'மெத்தைலோ பேக்டர்' என பெயரிட்டுள்ளனர். பலகோடி ரூபாய்

செலவில் செய்த ஆராய்ச்சிகளின் பலனாக, இந்த நுண்ணுயிர் திரவம் உருவாக்கப்பட்டுள்ளதா வேளாண் அதிகாரிகள் கூறுகின்றனர்.திரவ வடிவத்திலுள்ள இந்த பாக்டீரியாவை, பயிர்களின் மேல் இலைவழி தெளிப்பாக பயன்படுத்தும்போது, 7 நாட்கள் முதல் 10 நாட்கள் வரை, பயிர்கள் பாசனமின்றி, வாடாமல் தாக்குப்பபிடிக்கும். டெல்டா பகுதி வயல்களில் பயன்படுத்தி, இதன் நம்பகத்தன்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.இதை இலைவழித்தெளிப்பாக பயன்படுத்தும் போது, அது இலைகளின் மேல் ஒரு பூச்சாக படர்கிறது. இலைகளிலுள்ள நுண்துளைகளின் மேல் படலத்தை ஏற்படுத்தி, பயிரின் நீர்சத்து ஆவியாவதை மிகவும் குறைக்கிறது. இதனால், ஈரப்பதம் தக்கவைக்கப்பட்டு, அதிகபட்சம் 10 நாட்கள் வரையில் பாசனமின்றி சமாளிக்க முடியும்.'மெத்தைலோ பேக்டர்' தெளிப்பதற்கு ஏழு நாட்கள் முன்னும், பின்னும் எந்தவித ரசாயன உரங்களையோ, பூச்சிகொல்லிகளையோ பயன்படுத்தக்கூடாது.ஒரு ஏக்கருக்கு ஒரு லிட்டர் திரவத்தை, 100 லிட்டர் நீரில் கலந்து பயன்படுத்த வேண்டும். இதை 30 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

இதை நெல், பருத்தி, கத்தரி, தக்காளி, வெண்டை உள்ளிட்ட அனைத்து வகை பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். பயிர்களுக்கு பாசனம் தருவதை தள்ளிப்போட வேண்டிய சூழலில் உள்ள விவசாயிகள், இதை வாங்கி பயன்படுத்தலாம். இதுகுறித்து மேலும் தகவல் தெரிந்துகொள்ள 0422-6611294 என்ற எண்ணில் கோவை வேளாண் பல்கலை விஞ்ஞானிகளை தொடர்பு கொள்ளலாம்.

பக்க விளைவுகள்ஏற்படாது:பொள்ளாச்சி தெற்கு வேளாண் அலுவலர் சுமையாபானுகூறுகையில், "இது வறட்சியில் தவிக்கும் பயிர்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும். பயிருக்கு உயிர்நீர் தேவைப்படும் தருணத்தில் இதைப்பயன்படுத்தி, பாசனம் தருவதை ஒரு வாரம் தள்ளிப்போட முடியும். ஒரு லிட்டர் 'மெத்தைலோ பேக்டர்'ரூ.300 விலைக்கு கோவை வேளாண் பல்கலையில் கிடைக்கிறது. இது உயிர் உரம் என்பதால், பயிர்களுக்கு எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படாது" என்றார்.

## விவசாயிகள் குறை தீர் கூட்டம்

**சிவகங்கை:** வரும் 27ம் தேதியன்று நடக்க இருந்த விவசாயிகள் குறைதீர் கூட்டம் நிர்வாக காரணங்களால் வரும் 26ம் தேதி காலை 10.30 மணிக்கு சிவகங்கை

கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் தலைமையில் நடக்க உள்ளது. விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று குறைகளை தெரிவிக்கலாம்.

## ரூ.5 லட்சத்துக்குவாழைக்காய் ஏலம்

**அவிநாசி:**அவிநாசி வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில், சேவூரில் நேற்று நடந்த ஏலத்துக்கு 9,000 தார் வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 1,000 தார் அதிகம். நேந்திரன் ரகம் கிலோவுக்கு ரூ.10 முதல் 18 வரை, கதிலி ரகம் ரூ.12 முதல் 20 வரை விலைக்கு போனது. மொத்தம் ரூ.5 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

## கோடை மழை பெய்வதில் தாமதம்:காபி விளைச்சல் பாதிக்கும் அபாயம்

**கூடலூர்:**கூடலூரில் கோடை மழை பெய்யாத காரணத்தால், காபி உற்பத்தியில் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் தேயிலைக்கு அடுத்தபடியாக விவசாயிகள் காபி உற்பத்தியில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். இங்கு 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் காபி விவசாயம் நடந்து வருகிறது. இதில், 11 ஆயிரம் ஏக்கர் ரொபஸ்டா காபியும், 4000 ஏக்கர் அரேபிக்கா காபியும் விளைவிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் ரொபஸ்டா காபி செடிகளில் பிப்ரவரி மாதத்திலும், அரேபிக்கா காபி செடிகளில் ஏப்ரல், மே மாதங்களிலும் பூ பூப்பது வழக்கம். காபி பூக்கும் போது, "பூ மழை' எனப்படும் கோடை மழை அவசியமாகும். காபி பூவிலிருந்து முழுமையான மகசூல் கிடைக்க, 25 மி.மீ., மழை பெய்ய வேண்டும்; பூ மலர்ந்து 8 நாட்களுக்குள் பின் ஒரு கோடை மழை பெய்ய வேண்டும்.தற்போது, ரொபஸ்டா காபி செடிகளில் பூ மலர துவங்கி உள்ளது. சில நாட்களில் அனைத்தும் செடிகளிலும் பூக்கள் மலர்ந்து விடும். ஆனால், இதுவரை கோடை மழை பெய்யாததால், மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சிறு விவசாயிகள் கூறுகையில்,"காபி பூ பூக்கும் போது, கோடை மழை பெய்தால், நல்ல மகசூல் கிடைக்கும்; நடப்பாண்டில், கோடை மழை பெய்யாத காரணத்தால், விளைச்சல் பாதிக்கும் அபாயம் உள்ளது' என, கவலையுடன் தெரிவித்தனர்.

## விவசாய நிலங்களில் காட்டெருமைகள்

**ஊட்டி :**ஊட்டி வெப்பெக் எஸ்டேட் பகுதியில், காட்டெருமைகள் விவசாய நிலங்களில் புகுந்து வருகின்றன. ஊட்டி வெல்பெக் எஸ்டேட் அருகே தோடா காலனி, அண்ணா காலனி உட்பட பகுதிகள் உள்ளன. வனப்பகுதியை ஒட்டியுள்ள இங்கு, தேயிலை, கேரட், உருளைக் கிழங்கு உட்பட சாகுபடியில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். அப்பகுதி விவசாயிகள் கூறுகையில்,"சில நாட்களாக இப்பகுதியில் முகாமிட்டுள்ள 15க்கும் மேற்பட்ட காட்டெருமைகள், தோட்டத்துக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி விட்டன, இப்பிரச்னைக்கு தீர்வு ஏற்படுத்த, வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

## முன் கூட்டியே காய்ப்புக்கு வந்த இலவம் மரங்கள்

**வருஷநாடு:**வருஷநாடு பகுதிகளில், இலவ மரங்கள் முன்கூட்டியே காய்ப்புக்கு வந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வருஷநாடு,வாலிப்பாறை, தும்மக்குண்டு, தண்டியக்குளம், மணலாத்துக்குடிசை, முருக்கோடை, ராயர்கோட்டை, ஓயம்பாறை, காந்திக்கிராமம், வண்டியூர்,சிங்கராஜபுரம் பகுதிகளில் இலவம் சாகுபடி அதிகளவில் உள்ளது. இலவம் மரங்கள் ஆண்டுக்கு ஒரு முறை காய்ப்புக்கு வரும். ஏப்ரல்,மே, ஜூன் மாதங்களில் முழுமை பெறும். இந்தாண்டு பிப்., மாதத்திலே காய்ப்புக்கு வந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது, சில இடங்களில் தரம் பிரிக்கும் பணி, தீவிரமாக நடந்து வருகிறது. இப்பகுதி விவசாயிகள் கூறியது:

*காராமணி,வாலிப்பாறை: இந்தாண்டு போதிய மழை இல்லாததததால், இலவம் மரங்கள் முன் கூட்டியே காய்ப்புக்கு வந்துள்ளன. ஆனால், பஞ்சு எடை இல்லை. விலை 65 முதல் 70 ரூபாய் வரை கிடைத்தால் மட்டுமே, விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும்.

*சோலை, சீலமுத்தையாபுரம்: இந்த பகுதியில், ஆண்டுதோறும் மே மாதம் காய்ப்புக்கு வரும். தற்போது பிப்., காய்ப்புக்கு வந்துள்ளதால்,வறட்சியில் இருந்து மீண்டு வருகிறோம், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### உளுந்தூர்பேட்டை அருகே தரிசு நிலத்தை மேம்படுத்த ஆய்வு கூட்டம்

**உளுந்தூர்பேட்டை, :** உளுந்தூர்பேட்டை அருகே அஜீஸ்நகர் பகுதியை சேர்ந்தவர்கள் நெய்வேலி என்எல்சி நிறுவனத்திற்கு இடம் கொடுத்ததற்காக அவர்களுக்கு 1361 ஏக்கர் பரப்பளவில் தரிசு இடம் வழங்கப்பட்டது. இந்த இடத்தினை சீரமைத்து விவசாயம் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்து தருவது குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது. இதில் குடிநீர் வடிகால் முகமை மாநில இயக்குனர் சுரேஷ்குமார் பேசினார்.

அப்போது அவர் பேசுகையில் தரிசாக உள்ள நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கு போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக ரூ 56 லட்சத்து 60 ஆயிரம் முதல் கட்டமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை கொண்டு நிலத்தை சீரமைப்பது, பண்ணை குட்டை அமைத்தல் உள்ளிட்ட பணிகளை செய்யப்படும் என தெரிவித்தார். இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் கூறுகையில், எங்கள் பகுதியில் உள்ள நிலங்களுக்கு அருகில் வனத்துறைக்கு சொந்தமான காப்புகாடுகள் உள்ளது. இதில் இருந்து வரும் ஏராளமான மான்கள் எந்த பயிர் வைத்தாலும் தின்று நாசம் செய்யும் நிலை உள்ளது. இதனை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், காப்புகாடுகளுக்கு அருகில் கம்பி வேலி அமைத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். இது குறித்து விழுப்புரம்ஆட்சியரிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இயக்குனர் சுரேஷ்குமார் தெரிவித்தார். ஆய்வு கூட்டத்தில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை ராஜசேகர், துணை வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குனர் கருணாநிதி, மண்டல துணை வட்டாட்சியர் வெங்கடேசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்ரமணியன், சப்இன்ஸ்பெக்டர் துரைமணி, விரிவாக்க அலுவலர் காமராஜ் உள்ளிட்ட கிராம பொதுமக்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**இலவச கால்நடைகளுக்கு மருந்து வழங்கும் முகாம்**

**திருவெண்ணெய்நல்லூர், :** திருவெண்ணெய்நல்லூர் அருகே இலவச கால்நடைகளுக்கு மருந்து பொருட்கள் வழங்கும் முகாம் நடைபெற்றது. திருவெண்ணெய்நல்லூர் அடுத்த ஆலங்குப்பம் கிராமத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்ட இலவச கறவைமாடுகளுக்கு கால்நடை உதவி மருத்துவ இயக்குனர் குபேந்திரன் தலைமையில் முகாம் நடைபெற்றது. இதில் 50 மாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு தாதுஉப்புகலவை மற்றும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ரூ. 100 வழங்கப்பட்டது. ஊராட்சி மன்றதலைவர் வளர்மதி முருகேசன், கல்விகுழு தலைவர் முருகேசன், கால்நடை மருத்துவர் இளங்கோ, உதவி மருத்துவர்கள் தியாகீஸ்வரன், கனகராஜ், கஜேந்திரன், மற்றும் உதவியாளர்கள் வள்ளி, குணசுந்தரி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**இடைப்பாடி கூட்டுறவு சங்கத்தில் ரூ3.5 கோடிக்கு பருத்தி விற்பனை**

**இடைப்பாடி, :** சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் பெங்களூரு, ஓசூர், திருவண்ணாமலை, ஈரோடு, திருப்பத்தூர், திருச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் 1300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நேற்று முன்தினம் முதல் நேற்று காலை வரை 15 ஆயிரம் மூட்டை பருத்தி விற்பனைக்கு வந்தது.இதில், பி.டி ரகம் குவிண் டால்ரூ4950முதல்ரூ5850 வரையிலும் ஏலம் போனது. இதேபோல், டிசிஎச் முதல்ரகம் ரூ7150 முதல் ரூ7550 வரையிலும், 2வது ரகம் ரூ6300 முதல் ரூ6800 வரையிலும் ஏலம் போனது. கடந்தவாரத்தை விட டிசிஎச் பருத்தி கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைந்தது. பி.டி பருத்தி கிலோவுக்குரூ1 முதல் ரூ2 வரையிலும் அதிகரித்தது. இதன் மூலம் நேற்று ஒரே நாளில் ரூ3.5 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.வாரம் தோறும் சனிக்கிழமை மட்டும் பருத்தி ஏலம் நடந்தது. தற்போது வரத்து அதிகரித்திருப்பதையடுத்து செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏலம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### துறையூரில் 216 மூட்டை பருத்தி ஏலம் 1 கிலோ பருத்தி ரூ.47.39

**திருச்சி,:** துறையூரில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஏலத்திற்காக 216 மூட்டைகள் குவிந்தது. இதில் ஒரு கிலோ பருத்தி ரூ.47.39க்கு ஏலம் போனது. திருச்சி மாவட்டம் துறையூர் வட்டாரத்தில் திருச்சி விற்பனைக்குழுவின் கீழ் உள்ள துறையூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் 3வது வாரமாக பருத்தி மறைமுக ஏலம் விடப்பட்டது. துறையூர் வட்டாரத்தை சேர்ந்த ரெங்கநாதபுரம், புளியம்பட்டி, உப்பிலியபுரம் வட்டாரம் ஒக்கரை, பச்சபெருமாள்பட்டி, நாகலாபுரம், முருங்கப்பட்டி, முசிறி வட்டாரம் கோட்டாத்தூர், அபினிமங்களம் ஆகிய கிராமங்களில் இருந்து விவசாயிகள் தாங்கள் விளைவித்த பருத்தியினை சந்தைபடுத்த ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.
இதில் 44 விவசாயிகள் மொத்தம் 44 குவியல் பருத்தியை கொண்டு வந்தனர். மொத்தம் 216 பருத்தி மூட்டைகள் ஏலம் விடப்பட்டது. ஒரு கிலோ பருத்தி ரூ.47.39க்கு ஏலம் போனது. இதில் 3 வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். இது குறித்து திருச்சி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (வணிகம்) சந்திரசேகரன் கூறுகையில், திருச்சி விற்பனைகுழு செயலர் கந்தசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) பாண்டி யராஜன் ஆகியோர் ஏலத்திற்கு பருத்தி கொண்டு வந்த விவசாயிகளிடம் நேரில் ஆலோசனை நடத்தினர். தொடர்ந்து அடுத்த வாரமும் பருத்தி ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இந்த ஏலத்திற்கான ஏற்பாடுகளை திருச்சி விற்பனை குழு அலுவலர்கள் மற்றும் துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலர்கள் செய்திருந்தனர்3 வாரத்தில் 472 மூட்டை மூன்று வாரமாக நடந்த பருத்தி ஏலத்தில், மொத்தம் 97 விவசாயிகள் மூலம் 97 குவியல்கள் ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டு இருந்தது. ஏலத்தில் மொத்தம் 472 மூட்டை  பருத்தி ஏலமிடப்பட்டது.

### உழவர் ஒருங்கிணைந்த விரிவாக்க மையம் திறப்பு45,403 விவசாயிகள் பயன் அடைவார்கள்

**திருச்சி, :** மண்ணச்சநல்லூரில் உழவர் ஒருங்கிணைந்த விரிவாக்க மையத்தை காணொலி காட்சி மூலம் முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். இந்த மையம் ம் 45,403 விவசாயிகள் பயன் அடைவார்கள்.தமிழ்நாட்டில் திருச்சி, கோவை,

திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, ராமநாதபுரம், தஞ்சை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 10 மாவட்டங்களில் உழவர் ஒருங்கிணைந்த விரிவாக்க மையம் அமைக்க அரசு முடிவு செய்தது. அதன்படி திருச்சி மாவட்டத்தில் மண்ணச்சநல்லூரில் அமைக்கப்பட்ட உழவர் மையத்தை முதல்வர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.இந்த உழவர் மையம் ரூ.1.47 கோடி மதிப்பீல் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் உழவர்களுக்குத் தேவையான அனைத்து புதிய தொழில் நுட்பங்களை ஒரே இடத்தில் வழங்க, வேளாண் மற்றும் இதர துறைகளான தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகம், வேளாண் பொறியியல் மற்றும் விதைச் சான்றளிப்புத்துறை ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒரே வளாகத்தில் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அனைத்து விதமான பயிற்சிகளையும் அளிக்க அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கூட்ட அரங்கம், உழவர்களுக்குத் தேவையான அனைத்து இடுபொருட்களும் உரிய காலத்தில் கிடைத்திட வழிவகை செய்யும் பொருட்டும் இம்மையத்தில் சேமிப்பு கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.வேளாண்மை துறை மற்றும் இதர துறைகளின் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் அடங்கிய ஒரு நிரந்தர கண்காட்சி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நவீன தொடுதிரை கணினியில் பயிர் மருத்துவ மென்பொருள் நிறுவப்பட்டு, உழவர்கள் தாங்களாகவே பூச்சி மற்றும் நோய்களை கண்டறிந்து, பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

உழவர்களின் வசதிக்காக தானியங்கி பணம் எடுக்கும் இயந்திரம் மற்றும் பொது தொலைபேசி வசதி நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தின் வாயிலாக, மண்ணச்சநல்லூர் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களான முசிறி, துறையூர் பகுதி விவசாயிகள் 45,403 நபர்கள் பயனடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாமக்கல்லில் 25ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி

**திருச்சி,** : நாமக்கல்லில் வரும் 25ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி நடை பெறுவதால் அதில் பங்கேற்க தொழில்முனைவோர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில்

கோழி பண்ணையாளர்கள், வளர்ப்பவர்களின் நலன் கருதி நாட்டுக் கோழி வளர்ப்பும், மூலிகை முதலுதவி மருத்துவமும் பற்றிய ஒருநாள் இலவச பயிற்சி வகுப்பு வரும் 25ம் தேதி மதியம் 1.30 மணியளவில் நடை பெற உள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள கோழிப்பண்ணையாளர்கள், வளர்ப்பவர்கள் மற்றும் பண்ணை அமைக்க விருப்பமுள்ள தொழில் முனைவோர் நாமக்கல் கால்நடை மருத்துவமனை ஆராய்ச்சி மையம் மற்றும் கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ பேராசியரை தொடர்பு கொண்டு 24ம் தேதி மாலைக்குள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.
மேலும் விவரங்களுக்கு 94432- 51330,04286- 233230 என்ற தொலை பேசியில் தொடர்பு கொள்ளலாம் என நாமக்கல் கால்நடை மருத்துவமனை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

**வடசேரி அணையை புனரமைக்க ரூ.1.90கோடி மதிப்பீட்டில் திட்டம் அதிகாரிகள் தகவல்**

**கரூர், :** வடசேர் அணையை புனரமைக்க ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலணைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கரூர் மாவட்ட கலெக் டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற் றது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்தார். கீழவெளியூர் ராஜூ, கல்லடை கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை அமைக்கவேண்டும் என 3ஆண்டாக வலியுறுத்தி வருவதாகவும் உரியநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். காவிரியாற்று கட்டளை மேட்டுவாய்க்கால் மதகுளண்15, 16ன் பாசனதாரர்கள், பொய்யாமணியில் ஒருபுறம் பாசன வாய்க்கால், மறுபுறம் வடிகால்வாரி, நடுவில் கரையும் உள்ளது. ஆக்கிரமிப்பு காரணமாக அரிப்பு ஏற்படுகிறது. ஆக்கிரமிப்பை உடனே அகற்ற வேண்டும் என்றனர். வருவாய்த்துறை மூலம் அளவீடு செய்து ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டளை கதவணையில் ஒரு டிஎம்சி தண்ணீரை தேக்கி வைக்கவேண்டும், கிருஷ்ணராயபுரம், குளித்தலை காவிரி பாசன பகுதியில் வாழை கிடங்குவெட்டி சாகுபடி செய்கின்றனர். தற்போது நீர்வரத்து குறைந்துவிட்டதால் நீர் சாகுபடி

முறை யை மாற்றி அடர்நடவு முறைக்கான பயிற்சி அளிக்கவேண்டும் என ராஜாராம் கோரினார். நடவடிக்கை எடுக்கப்படுவதாக அதிகாரிகள் பதில்அளித்தனர். வடசேரி பாண்டியன் கூறுகையில், வடசேரி பெரியகுளத்தை தூர்வாரவேண்டும். குளத்திற்கு வரும் வாய்க்கால் பாசன வாய்க்கால்களையும் தூர் வாரவேண்டும் என்றார். அதிகாரிகள் பதில்அளிக்கையில் பெரியகுளத்தை உரியமட்டத்திற்கு பலப்படுத்தவும், வரத்து மற்றும் பாசனவாய்க்காலை தூர்வாரவும், மதகு, கலிங்கிக ளை சீர்செய்து, காப்பேரி, வடசேரி அணையை புனரமைக்க ரூ.1.90கோடி மதிப் பீட்டில் திட்டம் தயாரித்து அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதிகிடைத்ததும் பணிமேற்கொள்ளப்படும் என தெரிவித்தனர். மேட்டுமருதூர் வீரமலை, கலம் வைக்கோல் போர் போன்றவற்றை புறம்போக்கு நிலங்களில் அமை த்துக்கொள்வதற்கு பிஎம்சி சான்றிதழ் வருவாய்த்துறையில் வழங்கப்படுகிறது. அதுபோல தங்கள்பகுதிக்கு ம் வழங்கவேண்டும் என்றார். இதற்கு குளித்தலை ஆர்டிஓ, தற்போது அரசு புறம்போக்கு நிலத்தில் பிஎம்சி புதிதாக பதிந்து வழங்க இயலாது என்றார். இதற்கு வரமலை, வாய்க்காலில் தென்னங்கன்று வைப்பதற்கெல்லாம் அனு மதி கொடுக்கப்பட்டுள்ளது. வைக்கோல் போர் அமைக்க மறுக்கப்படுகிறது. எனவே அனுமதி அளிக்கவேண்டும் என்றார். தரகம்பட்டி தங்கவேல், அரசுகணக்கில் பணம் செலுத்துவதற்கும், பணம் பெறுவதற்கும் ஸ் டேட் வங்கிக்கு செல்லவேண்டிய திருக்கிறது. இப்பகுதியில் வங்கிக்கிளையை ஏற்படுத்த நீண்டகாலமாக கோரிவருகிறோம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண் டும் என்றார். வீரமலை, ஊராட்சிகளில் குடிநீர்மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை 6மாதத்திற்கு ஒருமுறையாவது சுத்தம் செய்யவேண்டும், தொட்டிகளை சுத்தம் செய்வதில்லை என கூறினார். அதற்கு அதிகாரிகள் குறிப்பிட்டுசொல்ல கேட்டனர்.

அப்போது பல விவசாயிகளும் தங்கள்பகுதியில் குடிநீர்தொட்டியை சுத்தம் செய்வதில்லை. தொட்டிமீது கிருமிநாசினி பவுடரை மட்டும் தெளித்துவிட்டுப் போய்விடுகின்றனர். உள்ளே உள்ள பாசி கசடுகளை அகற்றிவிட்டு பவுடர்போட்டு காயவிட்டு பின்னர் தண்ணீர் நிரப்பும் முறையை கிடைபிடிப்பதில்லை. குடிநீர் மூலம்தான் பல்வேறு தொற்றுநோய்கள் பரவிக்கொண்டிருப்பதாக கூறினர். கலெக்டர் ஜெ யந்தி, குடிநீர் தொட்டியை முறைப்படி மாதம் இருமு றை சுத்தம்

செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வளர்ச்சித்துறையினருக்கு உத்தரவிட்டார். கோபாலதேசிகன், தபா ல்அலுவலகங்களில் கார்டு மற்றும் ஸ்டாம்ப் தட்டுப்பா டு உள்ளது. இதனால் சாதா ரண மக்கள் பாதிக்கப்படுவதாக கூறினார்.

இதற்கு கரூர் அஞ்சல் கண்காணிப் பாளர் அளித்த பதிலில், தபால்கார்டு அனைத்து பகுதியிலும் தட்டுப்பாடு உள் ளது. தேவையான அளவு க்கு அச்சடித்து வரவழைத் து தட்டுப்பாடின்றிகிடைக் க நடவடிக்கை எடுக்கப் படும் என அளித்த பதிலை விவசாயிகளுக்கு தெரிவித்தனர். நடமாடும் நூலகம் பலமாவட்டங்களில் உள் ளது. கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தவேண்டும் என அவர் கேட்டார். நூ லகத்துறை அதிகாரி கூறுகையில், பெரிய மாவட்டங்களுக்குத்தான் நடமாடும் நூலகம் வழங்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்திற்கும் கேட்கப்பட்டிருப்பதாக கூறினார்.

## உளுந்து பயிரில் கூடுதல் மகசூல் பெறுவது எப்படி? வேளாண் அதிகாரிகள் விளக்கம்

**அன்னவாசல், :** புதுக்கோட்டை மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்துப் பயிரில் கூடுதல் மகசூல் பெறவது குறித்து வேளாண் அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

இதுகுறித்து புதுக் கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜ ஹான் மற்றும் குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் விளக்கமளித்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்குப் பிறகு தண்ணீர் வசதியுள்ள பகுதிகளில் கோடை உளுந்துப் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது உளுந்துப் பயிர் பூக்கும் தருணத்தில் உள்ளது. உளுந்துப் பயிரில் பூக்கள் உதிராமல் தடுக்கவும் அதிகளவில் பூக்கள் பூப்பதற்கும் உளுந்துப் பயிருக்கு இரண்டு சத டி.ஏ.பி. கரைசல் தெளிப்பது அவசியமாகும்.ஒரு ஏக்கருக்குத் தேவை யான நான்கு கிலோ டி.ஏ.பி. உரத் தினை 10 லிட்டர் தண்ணீரில், தெளிப்பதற்கு முதல்நாள் இரவே ஊற வைக்க வேண்டும். அவ்வப்போது கரைசலை நன்கு கலக்கிவிட வேண்டும். மறுநாள் இக்கரைசலை வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலுடன் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாக்கி கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளையில் செடிகள் நன்கு நனையுமாறு தெளிக்க

வேண்டும்.பூப்பூக்கும் சமயம் அதாவது விதைத்து 25வது நாட்களிலும் பின்பு 10 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறையும் 2 சத டி.ஏ.பி. கரைசலைத் தெளிக்க வேண்டும். 2 சத டி.ஏ.பி. கரைசலில் பயறு வகைப் பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து மற்றும் மணிச்சத்து உள்ளது. இச்சத்துக்களை இலைவழி மூலம் தெளிப்பதனால் பயிருக்கு உடனடியாகக் கிடைத்து பூக்கள் உதிர்வதைத் தடுக் கவும் அதிகமாக பூக்கவும் உதவி செய்கிறது. மேலும் காய்கள் திரட்சியாக நல்ல தரமானதாகக் கிடைக்கும்.இக்கரைசலைத் தெளிக்கும்போது வயலில் ஈரம் இருத்தல் அவசியம். பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட டி.ஏ.பி. உரத் தைக் கூடுதலாகப் பயன்படுத்தினால் செடிகள் கருகிவிட வாய்ப்புண்டு. இக்கரைசலை கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளையில் தெளிக்க வேண்டும். வெய் யில் நேரத் தில் தெளிக்கக் கூடாது.டி.ஏ.பி. கரைசல் தெளிக்க இயலாத பட்சத்தில் தமிழ் நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள பயறு அதிசயம் என்ற வளர்ச்சி யூக்கியினை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும். அனைத்து வட்டாரங்களிலும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு சத டி.ஏ.பி. கரைசல் தெளிக்கத் தேவை யான டி.ஏ.பி. உரம் 50 சத மானியத்திலும் பயறு அதியம் வளர்ச்சியூக்கி 50 சத மானியத்திலும் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநி யோகம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இரண்டு சத டி.ஏ.பி. கரைசல் அல்லது பயறு அதிசயம் வளர்ச்சி யூக்கியினைத் தெளித்துக் கூடுதல் மகசூல் பெறலாம்.

**பயிறு வகை பயிற்சி முகாம்**

**கறம்பக்குடி, :** கறம் பக்குடி வேளாண் வட்டாரத் தில் உள்ள பட்டத்திக்காடு ஊராட்சியில் ராபி பருவத்திற்கான பயிறு வகை முன் பருவ முனைப்பு இயக்க முகாம் நடைபெற்றது. கறம்பக்குடி வேளாண் உதவி இயக்குநர் மனோகரன் தலைமை வகித்தார். ஊரா ட்சி தலைவர் சாந்தி சாமி நாதன் முன்னிலை வகித்தார். புதுகை வேளாண் விதை சான்று அலுவலர் நல்லமுத்துராஜா, விதைப்பண்ணை அமைப் பது, விதை சான்று பணிகளை விளக்கினார். ஏற்பாடுகளை வேளாண்

உதவி அலுவலர்கள் பூமிநாதன், சௌந்தராஜன், அட்மா வட் டார தொழில்நுட்ப அலு வலர் பால்சாமி செய்திருந்தனர்.

### பூம்புகார் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை

**பூம்புகார், :** நாகை மாவட்டம் பூம்புகார் பகுதி மீனவர்கள் நேற்றுமுதல் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

நாகை மாவட்டம் பூம்புகார், வானகிரி, புதுக்குப்பம் ஆகிய பகுதியில் 1,250 மீனவர்கள் 75 விசை படகுகள், 250 பைபர் படகுகள் மற்றும் 50க்கும் மேற்பட்ட கட்டுமரங்களில் தினமும் கடலுக்கு சென்று மீன் பிடித்து வருவது வழக்கம். இந்நிலையில் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியும், சிறைபிடிப்பதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனைத்தொடர்ந்து தமிழகம் மட்டும் இலங்கை மீனவ பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் ஒருமாத காலத்திற்கு எல்லை தாண்டாமல் இருக்கும்படி இலங்கை மீனவர்கள் நிபந்தனை விதித்தனர். இதனால் கடலோர மாவட்டத்தை சேர்ந்த சுருக்குவலை, மடிவலை உபயோகிக்கும் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாமல் இருந்து வருகின்றனர். இந்நிலையில் பூம்புகார் பகுதியை சேர்ந்த 1,250 மீனவர்கள் நேற்று முதல் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. இதுகுறித்து வானகிரி பகுதியை சேர்ந்த மீனவர்கள் கூறுகையில் “மீன்பிடிக்க செல்லாததால் எங்களுடைய வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. எனினும் தமிழக மீனவர்களிடையே ஒற்றுமை இருப்பதை பறைசாற்றும் வகையில் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் இருந்து வருகிறோம்.” என்றனர்.

### இலுப்பூரில் பண்ணைக்குட்டை வெட்டும் பணி துவக்கம்

**கீழ்வேளூர், :** கீழ்வேளூர் அடுத்த இலுப்பூரில் நபார்டு வங்கி, ஔவை கிராம நலச்சங்கம் சார்பில் 5 கிராமங்களை உள்ளடக்கிய காக்கழனி நீர் செறிவு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பண்ணைக்குட்டை வெட்டும் பணி துவக்க நிகழ்ச்சி நடந்தது. நபார்டு வங்கி பொது மேலாளர் அதிஷ்டவேலு தலைமை வகித்தார். ஔவை கிராம நலச்சங்க செயலாளர் கிருஷ்ணகுமார், ஊராட்சி தலைவர்கள் இலுப்பூர் தையான், கூத்தூர் குமார் முன்னிலை வகித்தனர். ஔவை கிராம

நலச்சங்க திட்ட பொறியா ளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார்.
பண்ணைகுட்டை வெட்டும் பணியை துவக்கி வைத்து நாகை கலெ க்டர் முனுசாமி பேசுகையில், காக்கழனி நீர் செறிவு திட்டத்தில் இலுப்பூர், பட்டமங்கலம், கூத்தூர், காக்கழனி, செருநல்லூர் ஆகிய ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
ஏற்கனவே தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதியாக கீழ்வேளூர் ஒன்றியம் இருந்து வருகிறது. கடந்தாண்டு நாகை மாவட்டத்தில் 5 ஆயிரம் பண்ணை குட்டைகளை வெட்டப்பட்டது. பண்ணை குட்டை வெட்டினால் மீன் வளர்ப்பு, தோட்டப்பயிர் சாகுபடி, மரம் வளர்ப்பு செய்யலாம். பண்ணைக்குட்டையை வெட்டி வைத்தால் மழைநீரையும், வீணாக கடலில் கலக்கும் தண்ணீரையும் சேமித்து வைக்கலாம். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன் பயிர் சாகுபடிக்கும் பண்ணை குட்டையில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி பயன்பெறலாம். இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி பயன்பெறலாம் என்றார்.
கீழ்வேளூர் ஒன்றியக்குழு தலைவர் முருகானந்தம், தாசில்தார் விஜயா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மங்கையர்கரசி, ராஜன், முன் னாள் ஊராட்சி தலைவர் அங்காடிசேகர், ஊராட்சி துணைத்தலைவர் ராமன், நபார்டு வங்கி பொதுமேலாளர் சென்னை கணேஷ், மாவட்ட உதவி பொதுமேலாளர் ரவீந்திரன், வேளாண்மை துறை மண்டல இணை இயக்குனர் துரை, கீழ்வேளூர் வேளாண்மை உதவி இயக்குனர் மனோகரன் கலந்து கொண்டனர். ஔவை கிராம நலச்சங்க ஒருங்கிணைப்பாளர் இளங்கோவன் நன்றி கூறினார்.

**மீன்களை சுகாதாரமற்ற முறையில் கையாண்டால் பொருளாதார இழப்பு மீன்வள தொழில்நுட்ப பேராசிரியர்கள் தகவல்**

**நாகை, :** நாகை மீன்வள தொழில்நுட்ப நிலைய பேராசிரியர்கள் கணேசன், நாகூர் மீரான் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
மீனவர்கள் மீன்களை சுகாதாரமாக கையாளும் முறைகளை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் மீன் எப்போது இறக்கிறதோ அப்போதிலிருந்து மீனின் தோல், செவுள், குடல் பகுதிகளில் உள்ள பாக்டீரியாக்கள் செயல்பட ஆரம்பிக்கிறது. இதனால் உருவாகும் உயிரின கழிவுகளினால் ஒரு வகை துர்நாற்றம் ஏற்படும். சில இடங்களில் சுகாதாரமற்ற கையாளும் முறைகளால் மீன் விரைவில் கெட்டு விடும். இதனால் அதிகளவில் பணத்தை செலவழித்து, மீன்பிடி

தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு குறைவான வருமானமே கிடைக்கும்.

மேலும் மீனில் அடங்கி உள்ள உன்னதமான சத்துப் பொருட்களாகிய புரதம், கொழுப்பு, நார் சத்துக்களும் வீணடிக்கப்படுவதோடு, பல்வேறு மருத்துவ குணங்களும் விரயமாகிறது. இதனால் பாதுகாப்பான, அறிவியல் பூர்வமான சுகாதார முறைகளை கையாளுவது அவசியமான ஒன்றாகும். இதனால் அறுசுவை உணவு மட்டுமல்லாமல், அருமருந்தாகிய மீன் விரயமாவது தடுக்கப்படும். மீனவர்களும் மீனை அதிகவிலைக்கு விற்பனை செய்வதன் மூலம் சமூக மற்றும் பொருளாதார வளம் பெறவும் வாய்ப்பு ஏற்படும்.

மீன்களை கெடாமல் பாதுகாப்பது அதை கையாளும் முறைகளை பொறுத்தே அமைகிறது. நடைமுறையில் மீன்கள் சுகாதாரமற்ற முறையில் பிடிக்கப்பட்டு, சுத்தமற்ற கடற்கரையோரங்களில் குவித்து வைக்கப்படுகிறது. மீன்களை கடலிலிருந்து பிடித்த பின்னர் அதில் பனிக்கட்டிகளை பயன்படுத்தாமல் வெப்பத்தாக்குதலுக்கு உட்பட்டு எளிதில் கெட்டுப்போகும் நிலையில் வைக்கப்படுகிறது. இதனால் கடலில் பிடித்த மீன்களை கரை சேர்க்கும்போது மீன்களிலுள்ள நுண்ணுயிர்கள், அதிக வெப்பம், சுகாதாரமற்ற நிலையில் கையாளுதல் ஆகிய 3 காரணங்களால் மேலும் கெட்டுப்போகிறது. இதை தவிர்க்க சில வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும்.

பிடித்த மீன்களை வைக்கும் படகின் தளமானது மீன்களை கழுவுவதற்கு ஏற்றாற்போல்அமைந்திருப்பது நல்லது. மீன் வைக்கப்படுகிற இடம் வழுவழுப்பாக இருக்க வேண் டும். மூங்கில் கூடைகள், மரத்தாலான கூடைகள் ஆகியவற்றை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. ஏன் என்றால் மூங்கில் மற் றும் மரத்தாலான கூடை களை சுத்தப்படுத்துவது மிகவும் சிரமம். மேலும் கிருமிகள் தங்கி எண்ணிக்கையில் பெருகவும் வாய்ப்புள்ளது. மீன்கள் வைக்கப்படுகிற இடத்தை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும். அதற்காக டீப்பால் சோப்பையும், அதைத்தொடர்ந்து குளோரின் 100 பி.பி.எம். கலந்த நீரால் கழுவ வேண்டும்.

மிகவும் சுத்தமான நீரில் உருவான பனிக்கட்டிகளை வைத்திருக்க வேண்டும். ஒரு முறை மீன்பிடிப்பதற்கு பயன்படுத்திய பனிக்கட்டியை அடுத்த முறை பயன்படுத்த கூடாது. ஒவ் வொரு முறை மீன்பிடிக்கும் போதும் அதை சுத்தமான நீரால் அதாவது குளோரின் 2 பி.பி.எம். கலந்த நீரால் கழுவ வேண் டும். மீன்களை பாதுகாக்கும் பெட்டியில் பாலிதீன் அல்லது அதற்கு பொருத்தமான செயற்கை இழை களால் ஆன பொருட் களை வைத்தால் சுலபமாக கழுவ மற்றும்

நுண்கிருமிகளின் பிடிப்பு ஏற்படாமல் இருக் கும். பனிக்கட்டியில் இருந்து வரும் நீரை வெளியேற்ற வழி அமைக்க வேண்டும்.

மீன்களை கையாளும்போது மீனின் உடற்பகுதியில் எந்த பாதிப்பும் இல் லாமல் கையாள வேண்டும். குளிர்பெட்டி இல்லாத நேரத்தில் மீன்களை ஈரக்கோணிப்பையால் மூடுதல் அலலது ஈரப்பதத்துடன் வைத்திருப்பது மிக அவ சியம். அசுத்தமான நீரில் மீன்பிடிக்கக் கூடாது. மீன்பிடிப்போர் தங்களு டைய கைகளையும், கையுறைக ளையும், காலணியை யும் சோப்பு கலந்த அல்லது 100 பி.பி.எம். அளவு குளோரின் கலந்த நீரில் கழுவி சுத்தப்படுத்த வேண் டும். எனவே மீனவர்கள் மீன்களை சுகாதாரமான முறையில் விற்பனை செய்து லாபம் ஈட்டி பயன்பெறலாம். இவ் வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## தடை செய்யப்பட்ட வலைகள் உதவியுடன் மீன் பிடித்து வளத்தை பாதிப்படைய செய்யாதீர்கள் மீனவர்களுக்கு அறிவுரை

**நாகை, :** தடை செய்யப்பட்ட வலைகள் உதவியுடன் மீன் பிடித்து வளத்தை பாதிப்படைய செய்ய வேண்டாம் என்று மீனவர்களுக்கு கலெக்டர் முனுசாமி அறிவுரை வழங்கினார்.

நாகை கலெக்டர் அலுவலகத்தில் மீனவர்கள் இந்திய எல்லைக்குள் மீன் பிடிப்பது தொடர்பான மீனவர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான மீனவர்கள், மீன்பிடி தடை காலத்தை நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு மாற்றித்தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். மேலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன் பிடிக்க மாட்டோம், சர்வதேச கடல் எல்லையை கடந்து சென்று மீன்பிடிக்க செல்ல மாட்டோம் என்று மீனவர்கள் உறுதி அளித்தனர். கூட்டத்தில் கலெக்டர் முனுசாமி பேசியதாவது: சமீப காலமாக இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைப்பிடிக்கப்படுவதுடன் படகுகள், மீன்பிடி சாதனங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன. கப்பல்கள் செல்லும் பாதையில் படகுகளை செலுத்தக்கூடாது. மீனவர்கள் குழுவாக சென்று மீன் பிடிக்க வேண்டும். இரவு நேரங்களில் கட்டாயம் விளக்குகளை பயன்படுத்த வேண்டும். சந்தேகப்படும் படியான படகுகள் தென்பட்டால் உடனடியாக

கடலோர காவல்படையினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். தடை செய்யப்பட்ட வலைகளை கொண்டு மீன் பிடித்து வளத்தை பாதிப்படைய செய்யாமல் தொழில் செய்ய வேண்டும்.

மீனவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர்களை மீன்பிடிக்க அழைத்து செல்லக்கூடாது. கட்டாயம் அவர்களை கல்வி கற்க அனுப்ப வேண்டும். கல்வி கற்க அனுப்ப வசதி இல்லாதவர்கள் கலெக்டரை அணுகினால் உணவு, தங்கும் வசதியுடன் கல்வி கற்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். இதைதொடர்ந்து மீனவர்கள் கடைபிடிக்க வேண்டிய சட்ட நடைமுறை குறித்த விளம்பர பேனர்களை கலெக்டர் வழங்கினார். கடலோர காவல்துறை ஐஜி சொக்கலிங்கம், கடலோர காவல்துறை எஸ்பி மனோகரன், மாவட்ட எஸ்பி பொன்னி, கடலோர காவல்படை கமாண்டர் உதல்சிங், மீன்வளத்துறை இணை இயக்குனர் சுப்புராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## நாகையில் இலவச மூலிகை செடி பயிரிடுதல் பயிற்சி பதிவு செய்ய அழைப்பு

**நாகை, :** நாகையில் இலவச மூலிகை செடி பயிரிடுதல் பயிற்சி முகாமில் பங்கேற்க பதிவு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் சார்பில் இலவச வணிக மலர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி வகுப்பு சிக்கல் வேளாண் அறிவியல் மையத்தில் கடந்த 19ம் தேதி முதல் வருகிற 25ம் தேதி வரை 6 நாட்களுக்கு நடக்கிறது. மூலிகை செடிகள் பயிரிடுதலும் பராமரித்தலும் குறித்த பயிற்சி வகுப்பு வருகிற 26ம் தேதி முதல் மார்ச் 4ம் தேதி வரை. அழகு செடிகள் நாற்றங்கால் அமைத்தல், தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வகுப்பு மார்ச் 6 முதல் வருகிற 12ம் தேதி வரை 6 நாட்கள். காளான் வளர்ப்பு பயிற்சி வகுப்பு மார்ச் 13 முதல் 19ம் தேதி வரை 6 நாட்கள் நடக்கிறது. பயிற்சி வகுப்புகள் காலை 10 முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். இலவச பயிற்சி வகுப்புகளில் பங்கேற்க விரும்புவோர் சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு வேலை நாட்களில் காலை 10 முதல் மாலை 5 மணி வரை பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்து கொள்ள வருவோர், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் 3, பள்ளி மாற்றுச்சான்று, 8ம் வகுப்பு மற்றும் அதற்குமேல் தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் பட்டியல், வாக்காளர் அடையாள அட்டை அல்லது

பள்ளி, கல்லூரி அடையாள அட்டை, ரேஷன் கார்டின் அசல் மற்றும் நகல்களை எடுத்துவர வேண்டும். சான்றிதழ்களை சரிபார்த்த பின்னர் அசல் நகல்கள் திரும்ப தரப்படும். வறுமைகோடு சான்று இருந்தால் அதன் அசல் மற்றும் நகல்களை எடுத்துவர வேண்டும்.
பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்பவர்கள் 18 முதல் 35 வயது வரை இருக்க வேண்டும். 30 பேருக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தை 04365 246266 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு அறியலாம். இவ்வாறு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குனர் பரமசிவன் தெரிவித்துள்ளார்.

**பெரியாறு அணை நீர்மட்டம் 110.50 அடியாக குறைந்தது குடிநீருக்காக 75 கன அடி மட்டுமே திறப்பு**

**கூடலூர், :** முல்லை பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் பெரியாறு அணை நீர்மட்டம் 110.50 அடியாக குறைந்துள்ளது.
பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த பல மாதங்களாக மழை இல்லாததால், அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. இத னால் அணையின் நீர்மட்டமும் குறைந்து வருகிறது. இதனால் பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர் முற் றிலும் நிறுத்தப்பட்டது. குடிநீருக்கு மட்டுமே 100 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. தற்போது கடந்த 2 நாட்களாக 75 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி, 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர்மட்டம் 110.50 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 75 கன அடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 75 கனஅடியாகவும் இருந்தது. அணையின் இருப்புநீர் 991 மில்லியன் கனஅடியாகவும் உள்ளது.
71 அடி உயரமுள்ள வைகையின் நீர்மட்டம் 34.04 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 43 கனஅடியாகவும், அணையிலிருந்து மதுரை குடிநீருக்காக வினாடிக்கு 40 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்புநீர் 554 மில்லியன் கனஅடியாக உள்ளது.57 அடி உயரமுள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம்

நேற்று 34.60 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1 கன அடியாகவும், அணையிலிருந்து நீர் வெளியேற்றம் வினாடிக்கு 8 கன அடியாகவும் இருந்தது. அணையின் இருப்புநீர் 121.51 மில்லியன் கனஅடியாக உள்ளது.126 அடி உயரமுள்ள சோத்துப்பாறை அணையின்  நீர்மட்டம் நேற்று 85.77 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து இல்லை.  அணையிலிருந்து வினாடிக்கு 3 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 44.10 மில்லியன் கனஅடியாக இருந்தது.

**உயரப் பறக்குது அயிரை ஒரு கிலோ 1,200 ரூபாய்**

**திருவில்லிபுத்தூர், :** வரத்து குறைவு, வெளியூர்களில் இருந்து வருகை காரணமாக திருவில்லிபுத்தூரில் அயிரை மீன் கிலோ ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

திருவில்லிபுத்தூர் மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் 250க்கும் மேற்பட்ட கண்மாய், குளங்கள் உள்ளன. கொளுத்தும் வெயில், தொடர்மழையின்மை காரண மாக 99 சதவீதத்திற்கு மேற்பட்ட நீர்நிலை கள் வறண்டு விட் டன. இதனால், இங்கிருந்து திருவில்லிபுத்தூர் மார்க்கெட்டிற்கு மீன் வரத்து நின்று விட்டது. வெளியூர், வெளிமாநிலங்களில் இருந்து தற்போது மீன்கள் விற்பனைக்கு வருகிறது. வெளியூரில் இருந்து வருவதாலும், வரத்து குறைவினாலும் மீன் விலை அதிகரித்து வருகிறது.

திருவில்லிபுத்தூர் மீன் மார்க்கெட்டில் அயிரை மீன் கடந்த சில மாதங்களாகவே கிலோ ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதற்கடுத்தபடியாக கெழுத்தி மீன் ரூ.1100, வெள்ளை விலை மீன், பாறை மீன் ரூ.360, கருப்பு விலை மீன் ரூ.300க்கும் விற்கப்படுகிறது. கட்லா ஆந்திராவில் இருந்து வருவதால் ரூ.160, ஜிலேப்பி ரூ.120, நாட்டுவிரால் ரூ.650, ஒட்டுவிரால் ரூ.120, சாலைமீன் ரூ.100க்கும் விற்பனையாகிறது.மீன் விற்பனையாளர் குருவையா கூறுகையில், ‘‘அயிரை மீன் கிலோ ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தேனி, மேட்டுப்பாளையம் போன்ற வெளியூர்களில் இருந்து வருவதால் இந்த விலை. ஆந்திராவில் இருந்து வருவதால் ஜிலேப்பி மீனும், கட்லா மீனும் விலை உயர்ந்துள்ளது,’’ என்றார்.

### உளுந்து பயிரில் களைகளை கட்டுப்படுத்தும் முறை

**காட்டுமன்னார்கோவில், :** காட்டுமன்னார்கோவில் பகுதியில், நெல் அறுவடைக்கு பிறகு உளுந்து, பயறு சாகுபடி செய்துள்ளனர். உளுந்து, பயிர் சாகுபடியின் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு விவசாயிகள் தங்களுடைய குடும்ப தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். இதனால் நெற்பயிருக்கு அடுத்து உளுந்து, பயிருக்கே முக்கியத்துவம் அளிப்பர். இந்த ஆண்டு 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் உளுந்து, பயிர் சாகுபடி செய்துள்ளனர்.

உளுந்து பயிர் சாகுபடி செய்யப்பட்ட பரப்பில் தற்போது வேளாண்மை துறை சார்பில் களை நிர்வாக முகாம் பணிகள் நடந்து வருகிறது. ஒவ்வொரு கிராமங்களில் வேளாண்மை துறை அலுவலர்கள் சென்று உளுந்து, பயிர் சாகுபடி செய்யப்பட்ட வயல்களில் களைகளை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி கூறி வருகின்றனர். ஒரு ஏக்கருக்கு டர்கா சூப்பர் 200 மி.லிட்டர் அதனுடன் வசீர் 200 மி.லிட்டர் ஆகியவற்றை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிரிடப்பட்ட வயலில் தெளிக்க வேண்டும். இதனால் புல் வகைகள், பூண்டு, குதிரை வால், போன்ற களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

குச்சூர் கிராமத்தில் வேளாண்மை துணை இயக்குனர் இளங்கோ தலைமையில் வேளாண்மை உதவி இயக்குநர் கனகசபை முன்னிலையில் வயல் வெளி பகுதியில் செய்து காட்டப்பட்டது. வேளாண்மை அலுவலர் கீதா, உதவி வேளாண்மை அலுவலர்கள் பாரதிதாசன், அருள், குணச்சந்திரன், திருமுருகன், மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்டத்தில் 3.5 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

**நாமக்கல், :** நாமக்கல் மாவட்டத்தில் 3.5 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட உள்ளதாக கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி பணி குறித்த ஆலோசனைக்கூட்டம் நடந்தது. கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்து பேசியதாவது:

பால்வளத் துறையில் பணி புரியும் கால்நடை மருத்துவர்கள், கிராம அளவிலான பணியாளர்களை கோமாரி நோய் தடுப்பூசி பணிக்கு முழுமையாக ஈடுபடுத்தி

கொள்ள வேண்டும். ஊராட்சி தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் மூலம் கோமாரி நோய் தடுப்பூசி பணி குறித்த விழிப்புணர்வை கிராம மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.நாமக்கல் மாவட்டத்தில் 6வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி, மார்ச் 1ம் தேதி துவங்கி 21ம் தேதி வரை நடைபெறும். இதில், சுமார் 3.5 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது. இதற்காக, 85 சதவீதம் தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டு, 100 சதவீதம் கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்பகுதியில் உள்ள கால்நடை மருத்துவர்கள், அந்தந்த கிராமங்களுக்கு வருகை தந்து காலை 6 மணி முதல் 10 மணி வரை தடுப்பூசி போடும் பணி மேற்கொள்வார்கள். எனவே கால்நடை வைத்துள்ள விவசாய பெருமக்கள் தங்களது கால்நடைகளுக்கு தவறாமல் கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு துணை இணை இயக்குனர் சக்திவேல், துணை இயக்குனர் புருஷோத்தமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மழையின்றி விளைச்சல் பாதிப்பு வெண்டைக்காய் கிலோ ரூ26

**சேலம், :**தமிழகத்தில் மழை இல்லாததால் வெண்டைக்காய் விளைச்சல் பாதித்து விலை அதிகரித்து வருகிறது. தற்போது ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ26ஆக விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் சேலம், விழுப்புரம், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் வெண்டை சாகுபடி அதிகம். தமிழகத்தில் இருந்து கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் விற்பனைக்கு செல்கிறது. 6 மாத பயிரான வெண்டை, சாகுபடி செய்த மூன்றாவது மாதத்தில் இருந்தே விளைச்சல் தரும். தற்போது போதிய மழை இல்லாததால் கிணறு, போர்வெல்களில் தண்ணீர் குறைந்தது. சீராக தண்ணீர் விட முடியாததால் வெண்டை செடிகள் காய்ந்து கருகி வருகின்றன.இதனால் வெண்டைக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மார்க்கெட்டுக்கு வழக்கத்தை காட்டிலும் வரத்து பாதியாக குறைந்துள்ளது. இதன் காரணமாக, கடந்த மாதம்ரூ12முதல்ரூ14விற்ற ஒரு கிலோ வெண்டைக்காய், படிப்படியாக விலை உயர்ந்து தற்போதுரூ26முதல் ரூ28என விற்பனை செய்யப்படுகிறது.

**மஹாராஷ்டிராவில் நல்ல விளைச்சல் விதையில்லா திராட்சை வரத்து தமிழகத்தில் அதிகரிப்பு கிலோ ரூ50க்கு விற்பனை**

**சேலம், :**மகாராஷ்டிராமாநிலத்தில் விதையில்லா(சீட்லெஸ்) திராட்சை அமோக விளைச்சலை தந்துள்ளது. இதனால் சேலம் மார்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளது.

விதையில்லா திராட்சை வகைகள் மகாராஷ்டிரா மாநிலத்தில் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு பெய்த மழையால் சாகுபடி பரப்பு அதிகரித்தது. தற்போது கோடைகாலம் துவங்கியிருப்பதால் தமிழகத்திற்கும் வரத்து அதிகரித்துள்ளது.இது குறித்து சேலம் திராட்சை வியாபாரிகள் கூறியதாவது:

சேலம் கடைவீதியில் 10க்கும் மேற்பட்ட மொத்த திராட்சை வியாபாரிகள் உள்ளனர். மகாராஷ்டிராவில் இருந்து கொள்முதல் செய்கின்றனர். தற்போது திராட்சை வரத்து அதிகரித்துள்ளதால், சேலத்தில் கடந்த சில நாட்களாக திராட்சை விற்பனை களைக்கட்டி வருகிறது. தள்ளுவண்டிவியாபாரிகள்ஒரு கிலோரூ50முதல்ரூ60என விற்பனை செய்கின்றனர். இந்த சீசன் வரும் ஏப்ரல் கடைசி வரை இருக்கும்.இவ்வாறு திராட்சை வியாபாரிகள் கூறினர்.

**ஈரோட்டில் ஜவுளிக்கு மாற்றாக வளரும் உணவு பதப்படுத்தும் தொழில் ஆராய்ச்சி மையம் அமைக்க வலியுறுத்தல்**

**ஈரோடு, :** ஈரோடு மாவட்டத்தில் உணவு பதப்படுத்தும் தொழில் அதிக அளவில் நடைபெற்று வருவதால் பெருந்துறை சிப்காட் பகுதியில் தமிழக அரசின் சார்பில் உணவு ஆராய்ச்சி மையம் தொடங்க வேண்டும் என்று வணிகர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

ஈரோடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஜவுளி பிரதான தொழிலாக இருந்து வந்தது. நூல் விலையேற்றம், மின்வெட்டு, கழிவுநீர் வெளியேற்றும் விவகாரம், வெளிமாநில ஜவுளிகள் வருகை, ஆர்டர்கள் குறைவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஜவுளி தொழில் நலிவடைந்து வருகின்றது. இதே போல பவானி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஜமக்காளம் உற்பத்தி பிரதான தொழிலாக இருந்து வந்தது. ஜமக்காளம் கைத்தறி மூலம் மட்டுமே தயாரிக்க வேண்டும்.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக சட்டவிரோதமாக விசைத்தறிகள் மூலமாக தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் பவானியில் தயாரிக்கப்படும் ஜமக்காளம் விற்பனைக்காக வடமாநிலங்களுக்கு அனுப்பி வைப்பது தான் வாடிக்கையாக இருந்தது. ஆனால் தற்போது வடமாநிலங்களில் விசைத்தறிகள் மூலமாக தயாரிக்கப்படும் ஜமுக்காளம் பவானிக்கு விற்பனைக்கு வந்து கொண்டுள்ளது. இதனால் ஜமக்காளம் தொழிலும் நலிவடைந்து வருகின்றது.

ஜவுளி தொழிலை அடிப்படையாக கொண்ட ஈரோடு மாவட்டத்தில் தற்போது உணவு பதப்படுத்தும் தொழில் அதிக அளவில் நடைபெற்று வருகின்றது. உணவு, தானியங்களை பதப்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்து வருவதால் நல்ல லாபம் கிடைத்து வருவதால் முதலீட்டாளர்களிடம் வரவேற்பு கிடைத்து வருகின்றது. மசாலா பொருட்கள், இயற்கை உணவு தயாரித்தல், சத்து மாவு தயாரித்தல், உணவு பொருட்களை பதப்படுத்தி விற்பனை செய்தல் உள்ளிட்டவை அதிக அளவில் நடைபெற்று வருகின்றது.

எனவே உணவு பொருட்களின் தரம் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள பெருந்துறை சிப்காட் பகுதியில் உணவு ஆராய்ச்சி மையம் தொடங்க தமிழக அரசு முன்வர வேண்டும் என்று வணிகர்கள் வலியுறுத்தி உள்ளனர். இது தொடர்பாக அனைத்து வணிகர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சிவநேசன் கூறியதாவது:

ஈரோடு மாவட்டம் ஜவுளி, விவசாயத்தை அடிப்படையாக கொண்டது ஆகும். ஆனால் தற்போது ஜவுளி தொழிலில் இருந்து மாற்று தொழிலுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. உணவு பொருட்களை பதப்படுத்தும் மாற்றுத் தொழிலுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. எனவே இத்தொழிலுக்கு வலு சேர்க்கும் வகையில் சிப்காட் வளாகத்தில் ரூ.250 கோடி செலவில் உணவு ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

இதேபோல கோபியில் வாழைப்பழம் அதிக அளவில் விளைச்சல் உள்ளதால் வாழைபழத்தை 6 மாதகாலம் கெடாமல் பாதுகாக்கும் வகையில் எதிலின் திரவம் நிரப்பப்பட்டு செயல்படும் குளிர்சாதன கிடங்கு ஒன்றையும் அமைக்க அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு சிவநேசன் கூறினார்.

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் திறப்பு**

**ஈரோடு, :** ஈரோடு அருகே பாலக்காட்டூரில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் திறப்பு விழா நேற்று நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு மாநகராட்சி துணை மேயர் பழனிச்சாமி தலைமை தாங்கினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக ஈரோடு மேற்கு தொகுதி எம்.எல்.ஏ. ராமலிங்கம் கலந்து கொண்டு புதிய கூட்டுறவு சங்கத்தினை திறந்து வைத்தார். ஏற்கனவே இந்த பகுதியை சேர்ந்தவர்கள் சொட்டையம்பாளையத்தில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் பாலை வழங்கி வந்தனர். தற்போது புதியதாக திறக்கப்பட்டுள்ள இந்த கூட்டுறவு சங்கம் மூலம் பாலக்காட்டூர், இந்திராபுரம், வீரபண்ணாடிபுதூர், ஆர்.என்.புதூர் பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், மொடக்குறிச்சி எம்.எல்.ஏ. கிட்டுசாமி, மண்டலக்குழு தலைவர்கள் கேசவமூர்த்தி, முனியப்பன், ஒன்றிய செயலாளர் கண்ணுசாமி, தொகுதி செயலாளர் பழனிச்சாமி, பேரூர் கழக செயலாளர் மோகனசுந்தரம், சிந்தாமணி கூட்டுறவு சங்க தலைவர் ஜெகதீசன், ஆவின் தலைவர் ராமசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு கடன் வழங்கும் விழா**

**மஞ்சூர், :** மணியட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு ரூ.16.43 லட்சம் கடன் வழங்கப்பட்டது.

மஞ்சூர் அருகே உள்ள மணியட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான சிறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுக்கு கடன் உதவி வழங்கும் விழா நேற்று சங்க வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மணியட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நிர்வாக குழு தலைவர் சிவக்குமார் தலைமை தாங்கினார். துணை தலைவர் மகேஷ்குமார் முன்னிலை வகித்தார். சங்க செயலாளர் தர்மலிங்கம் வரவேற்றார். இதில் கடன் சங்கத்தை சேர்ந்த 20 விவசாய உறுப்பினர்களுக்கு விவசாய கடனாக ரூ. 7 லட்சத்து 23 ஆயிரம், கறவை மாட்டு கடனாக 13 பயனாளிகளுக்கு ரூ. 5 லட்சத்து 20 ஆயிரம், மற்றும் கூட்டு பொறுப்பு குழு கடனாக 2 குழுக்களுக்கு தலா ரூ. 2 லட்சம் வீதம் ரூ. 4 லட்சம் என மொத்தம்

ரூ. 16 லட்சத்து 43 ஆயிரம் கடன் உதவிகளை சங்க தலைவர் சிவக்குமார் வழங்கினார்.

விழாவில், சங்க இயக்குனர்கள் மோகன்ராஜ், ஆல்தொரை, செந்தில்குமார், பொன்னன், அமுல்ராஜ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளை காக்க விழிப்புணர்வு சிறப்பு கிராமசபா கூட்டம்**

**ராமநாதபுரம், :** கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடுவதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வரும் பிப். 25ல் ஊராட்சிகளில் சிறப்பு கிராமசபா கூ ட்டம் நடைபெற உள்ளது.

இது குறித்து கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் கால் மற்றும் வாய் கோமாரி நோய்கள் கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி வருகின்றன. இதன் பொருட்டு கால்நடை வளர்ப்போருக்கு பொருள் செலவு மற்றும் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. இந்நோய் தாக்கப்பட்ட மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளின் சினை பிடிப்பு தடை, இளங்கன்றுகள் இறப்பு போன்ற சிரமங்கள் ஏற்படுகின்றன. நோயை கட்டுப்படுத்த மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பு ஊசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 5 சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும் 6வது சுற்று தடுப்பூசி பணிகள் வரும் மார்ச் 2014 முதல் 3 வாரங்கள் மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.தடுப்பூசி போடும் பணிகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்டம் முழுவதும் ஊராட்சிகளில் பிப்.25ல் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெறும். இதில் கால்நடை வளர்ப்போர் பங்கேற்று பயனடையலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மானிய விலையில் இடுபொருட்கள் விநியோகம்**

**கடலாடி, :** கடலாடி பகுதி விவசாயிகளுக்கு மா னிய விலையில் வேளாண் இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன என வேளாண் உதவி இயக்கு னர் முருகன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், “கடலாடி பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு

சிப்சம், சிங்க் சல்பேட் 5 சதவீத மானியத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. ஆயில் இன்ஜினுக்கு ரூ.10 ஆயிரம் மானியமும், பிவிசி பைப்கள் ரூ.15 ஆயிரம் மானியத்திலும் வழங்கப்படுகின்றன.

பூச்சி கொல்லி மருந்து 50 சதவீதம் மானியத்திலும், கை தெளிப்பான், விசை தெளிப்பான், பேட்டரி மூலம் தெளிப்பான் 50 சதவீதம் மானியத்திலும் வழங்கப்படுகின்றன. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ரேஷன் கார்டு ஜெராக்ஸ் மற்றும் விவசாய நிலங்களுக்கான ஆவணங்களின் நகல் களை கொடு த்து, இந்த பொருட்களை மானியத்தில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்“ என்று தெரிவித்தார்.

தினத் தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஜனவரி வரையிலான 10 மாதங்களில் 67.90 லட்சம் டன் யூரியா இறக்குமதி**



**புதுடெல்லி,**

ஜனவரி வரையிலான 10 மாதங்களில் 67.90 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 192 கோடி டாலராகும். கடந்த முழு நிதி ஆண்டில் (2012–13) 80.40 லட்சம் டன் யூரியா இறக்குமதியாகியுள்ளது. இதில் 18.30 லட்சம் டன் ஓமன் இந்தியா பெர்டிலைசர் கம்பெனி வாயிலாகவும், 62.10

லட்சம் டன் பொதுத் துறை நிறுவனங்கள் வாயிலாகவும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**<u>ஓமன் இந்தியா பெர்டிலைசர்</u>**

நடப்பு நிதி ஆண்டின் முதல் பத்து மாதங்களில் ஓமன் இந்தியா பெர்டிலைசர் நிறுவனத்தின் மூலம் 18.30 லட்சம் டன்னும், இந்தியன் பொட்டாஷ், எம்.எம்.டி.சி. மற்றும் எஸ்.டி.சி. ஆகிய நிறுவனங்கள் வாயிலாக 49.60 லட்சம் டன்னும் யூரியா இறக்குமதியாகியுள்ளது.

நம் நாட்டில் ஆண்டுக்கு 2.20 கோடி டன் யூரியா உற்பத்தி செய்யப்படுகிறது. எனினும் 3 கோடி டன் தேவைப்படுவதால் மீதமுள்ள அளவு இறக்குமதி வாயிலாக பூர்த்தி செய்யப்படுகிறது. பருவமழை சிறப்பாக இருந்ததால் நடப்பு நிதி ஆண்டில் யூரியா பயன்பாடு அதிகரித்துள்ளது. எனவே இறக்குமதியும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2012–ஆம் ஆண்டில் யூரியா இறக்குமதி குறைவாக இருந்தது. கர்நாடகா, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வறட்சி காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதே இதற்கு காரணம்.


ஏப்ரல்–ஜனவரி மாத காலத்தில் யூரியா அல்லாத உரங்களான எம்.ஓ.பி., டீ.ஏ.பி. ஆகிய உரங்களின் இறக்குமதி 55.60 லட்சம் டன்னை எட்டியுள்ளது. இந்த உரங்களைப் பொறுத்தவரை சத்து சார்ந்த மானியக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது. பயன்பாடு அதிகமாக உள்ளதால் யூரியா விலையை மட்டும் மத்திய அரசு நிர்ணயிக்கிறது. இதனால் உர நிறுவனங்கள் அடக்க விலைக்கும் குறைவாக யூரியா உரத்தை விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனன. இதனால் நிறுவனங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு மானியம் வழங்கி ஈடு செய்கிறது. தற்போது சில்லறை விற்பனையில் ஒரு டன் யூரியா விலை ரூ5,360–ஆக உள்ளது.

**<u>கோரிக்கை</u>**

உர மானியத்தால் மத்திய அரசுக்கு பெரும் சுமை ஏற்படுகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் யூரியா விலையில் அதிக மாற்றம் செய்யப்படவில்லை. அதே சமயம்

மானியத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. இதனால் நீண்ட காலமாக யூரியா சில்லறை விற்பனை விலையை உயர்த்த வேண்டும் என மத்திய உர அமைச்சகம் கோரிக்கை விடுத்து வருகிறது.

**தமிழகத்தில் பருவமழை பொய்த்தது ஏன்? வானிலை ஆராய்ச்சி கருத்தரங்கில் புதிய தகவல்**



சென்னை,

பருவமழை பொய்த்துப் போனதின் காரணம் என்ன? என்பது குறித்து சென்னையில் நடந்த வானிலை ஆராய்ச்சி தொடர்பான கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது

<u>இந்திய வானிலை ஆராய்ச்சி குழுமம்</u>

இந்திய வானிலை ஆராய்ச்சி குழுமம், எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகத்துடன் இணைந்து வானிலை ஆராய்ச்சி பற்றிய கணிப்புகள் தொடர்பான 'இன்ட்ரோமெட்' என்ற பெயரில் தேசிய அளவிலான 4 நாள் கருத்தரங்கத்தை நடத்தியது.

இந்த கருத்தரங்கை இந்திய புவியியல் விஞ்ஞான துறை செயலர் டாக்டர் ஷைலேஷ் நாயக் தொடங்கி வைத்தார். தமிழக அரசின் வருவாய்த்துறை தலைவர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலர் டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் முன்னிலை வகித்தார்.

கருத்தரங்கை தொடங்கி வைத்து டாக்டர் ஷைலேஷ் நாயக் பேசியதாவது:–

நீரோட்ட மாற்றம்

வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த குளிர்ந்த நீரோட்டம் வெப்பமடைந்தது நீராவியாக மாறிப்போனது தான் தமிழகத்தில் பருவ மழை பொய்த்துப் போனதின் காரணமாகும். அதேபோல பசிபிக் பெருங்கடலில் நிலை கொண்டிருந்த நீரோட்ட மாற்றம் தான் பெரு நாட்டில் மழையின்மைக்கும் ஆஸ்திரேலியா நாட்டில் சீரான மழை பெய்வதற்கும் காரணமாக அமைந்தது.

புயல், மழை உள்பட இயற்கை சீற்றங்களை கணிந்து முன்கூட்டியே அறிவிப்பதில் இந்திய வானிலை ஆராய்ச்சி குழுமம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. புயல், வெள்ளம், கடல் கொந்தளிப்பு போன்றவை தொடர்பாக மீனவர்களுக்கு செல்போன் மூலம் குறுந்தகவல்(எஸ்.எம்.எஸ்) மூலம் தெரிவிக்கும் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி, உடனுக்குடன் தகவல்களை விரைவாக சென்று சேர்க்கும் வகையிலான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

பருவநிலை தொடர்பான விஞ்ஞான ரீதியான விஷயங்களில் இந்திய ஆராய்ச்சி குழுமம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. இளைய தலைமுறையினர் வானிலை தொடர்பான படிப்புகளை கற்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆராய்ச்சிகள்

சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறும்போது; வரும் மார்ச் 23–ந்தேதி உலக வானிலை தினத்தை முன்னிட்டு, வானிலை தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும், தென்மேற்கு பருவமழை தொடங்கும் காலங்களான ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாத வானிலை கூற்றுகளும், செயல்பாடுகளும் ஏப்ரல் 15–ந்தேதி அறிவிக்கப்படும்'' என்று தெரிவித்தார்.

இந்த கருத்தரங்கில் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக மாணவர்கள் உள்பட பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்தும், தொழில் நுட்ப மையங்களில் இருந்தும்

மாணவர்கள் கலந்து கொண்டு வானிலை, செயற்கைகோள் தொடர்பான தங்களது ஆராய்ச்சி படைப்புகளை செய்முறை விளக்கங்களோடு காண்பித்தனர்.

<u>மாதிரி செயற்கைக்கோள்</u>

கருத்தரங்கின்போது, ஆளில்லா செயற்கைகோள் மாதிரி ஒன்று உருவாக்கப்பட்டது. அதை பல்கலைக்கழக மாணவர்கள் செயல்படுத்தி அந்தரத்தில் வட்டமிட்டபடி பறக்க செய்தனர். இதை சிறப்பு விருந்தினர் உள்பட அனைவரும் ஆர்வத்தோடு பார்த்து ரசித்தனர்.

கருத்தரங்கத்தில் அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த ஏராளமான விஞ்ஞானிகளும், இந்திய வானிலை ஆராய்ச்சி குழும விஞ்ஞானிகளும் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் சிறந்த ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்த 5 விஞ்ஞானிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் இந்திய வானிலை ஆராய்ச்சிக் குழுமத்தில் சிறந்த முறையில் பங்காற்றியதற்காக 4 விஞ்ஞானிகளுக்கு பட்டயங்கள் வழங்கப்பட்டன.

கருத்தரங்கத்தில் பங்கேற்றவர்களை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.பொன்னவைக்கோ வரவேற்று பேசினார். நிகழ்ச்சி முடிவில் இந்திய வானிலை ஆராய்ச்சி குழும செயலாளர் டாக்டர் கே.ஜே.ரமேஷ் நன்றி கூறினார்.

**காக்களூர் ஏரிக்கரையை சீரமைக்க ரூ.30 லட்சம் கலெக்டரிடம் வழங்கினர்**

**திருவள்ளூர்,**

திருவள்ளூர் நகரின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் கமாண்டோ பாஸ்கரன், அமைச்சர் பி.வி.ரமணாவுடன் கலந்தாலோசனை செய்து திருவள்ளூர் நகர வளர்ச்சி சங்கத்தை தொடங்கி அதனை முறைப்படி பதிவு செய்தார். இந்த நகர வளர்ச்சி சங்கமானது திருவள்ளூரில் பல்வேறு நலத்திட்ட பணிகள் உருவாக்க திட்டமிட்டது. அதன்படி காக்களூர் ஏரியின் கரையை பலப்படுத்தி நீரை சேமித்து வைக்கவும், ஏரியை சுற்றி நடைபாதை அமைத்து பொதுமக்கள் உடற்பயிற்சி செய்ய சில்வர் கைப்பிடி அமைக்கவும் முடிவு செய்தது.

தன்னிறைவு திட்டத்தின் கீழ் திருவள்ளூர் நகர வளர்ச்சி சங்கம் சார்பில் ரூ.30 லட்சத்திற்கான காசோலையை, நகர்மன்ற தலைவர் கமாண்டோ பாஸ்கரன், திருவள்ளூர் நகர வளர்ச்சி சங்க தலைவர் சண்முகசுந்தரம், பொருளாளர் சாரதி, துணைத்தலைவர் வேலு, உதயகுமார் ஆகியோர் மாவட்ட கலெக்டர் வீரராகவராவிடம் வழங்கினார்கள்.

**கொங்கணாபுரம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் 12ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ.2½ கோடிக்கு ஏலம் போனது**



**இடைப்பாடி,**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி விற்பனையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் வழக்கமாக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெறும். தற்போது பருத்தி வரத்து அதிகரித்ததால் நேற்றும் ஏலம் நடைபெற்றது. தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை கொண்டு வந்து ஏலத்தில் கலந்துகொண்டார்கள். நேற்று சங்கத்திற்கு 12 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு வந்தன. மொத்தம் ரூ.2½ கோடிக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

இதில் பி.டி ரக பருத்தி மூட்டைகள் ரூ.4750 முதல் ரூ.5800–க்கு ஏலம் சென்றது. டி.சி.எச்.ரக பருத்தி மூட்டைகள் ரூ.7000 முதல் ரூ.7600–க்கு ஏலம் சென்றது. இதில் வெளியூர் வியாபாரிகள் பலரும் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். மேலும் பருத்தி

வரத்து அதிகரித்துள்ளதால் வரும் செவ்வாய்க்கிழமை வரை ஏலம் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கூடலூரில் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி**



கூடலூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று இரவு பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>கோடை வெயில் அதிகரிப்பு</u>

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் கடந்த சில வாரங்களாக பகலில் கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. இரவு பனிப்பொழிவும் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் இரு வேறு கால நிலைகளால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு ஆளாகி வந்தனர். மேலும் கோடை வறட்சியால் நீர்நிலைகளில் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகிறது. இதேபோல் வனப்பகுதிகள் காய்ந்து காட்டு தீ பரவி வருகிறது.

இதனால் வனவிலங்குகள் உணவு மற்றும் தண்ணீரை தேடி பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றது. குடியிருப்பு பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் போதிய தண்ணீர் இன்றி விவசாய பணிகள் மேற்கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர். இதனால் கோடை மழையை எதிர்பார்த்து காத்து இருந்தனர்.

<u>திடீர் மழை</u>

இந்த நிலையில் நேற்று விடியற்காலையில் கூடலூர் பகுதியில் பரவலாக சிறிது நேரம் சாரல் மழை பெய்தது.பின்னர் வழக்கம் போல் வெயில் சுட்டெரித்தது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டனர்.இந்த நிலையில் மாலை 5 மணி அளவில் முதுமலை, நெலாக்கோட்டை உள்ளிட்ட வனப்பகுதியில் பரவலாக மழை பெய்தது.

பின்னர் இரவு 7½ மணிக்கு கூடலூர் பகுதியில் திடீர் என பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்கால நிலைக்கு கூடலூர் மாறியது. மேலும் தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதேபோல் வறண்டு கிடந்த ஆற்று வாய்க்கால்களிலும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. சுமார் 1½ மணி நேரத்துக்கு மேலாக மழை நீடித்தது.

இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுதவிர வனப்பகுதியிலும் பசுமை திரும்பும் என வனத்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**திறந்த வெளி கிடங்குகளில் சேமிக்கப்படும் நெல் மூட்டைகளுக்கு கூடுதல் பாதுகாப்பு அதிகாரி தகவல்**

**குடவாசல்,**

திறந்த வெளி கிடங்கு களில் சேமிக்கப்படும் நெல் மூட்டை களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவ தாக நுகர்பொருள் வாணி பக்கழக முதுநிலை மண் டல மேலாளர் அழகிரி சாமி கூறினார்.

<u>**திறந்த வெளி கிடங்கு**</u>

திருவாரூர் மாவட்டம் குட வாசல், கடகம்பாடி பகுதி களில் உள்ள திறந்தவெளி நெல் கிடங்குகளில், நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலமாக விவசாயிகள் விற் பனை செய்யும் நெல் மூட்டைகள் சேமிக்கப்படு கின்றன. இந்த திறந்தவெளி நெல் சேகரிப்பு கிடங்குகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக திருவாரூர் மண்டல முதுநிலை மேலாளர் அழகிரிசாமி பார்வையிட் டார். அப்போது நெல் மூட்

டைகளை அடுக்கி வைக்கும் பணி, திறந்தவெளி கிடங்கின் பாதுகாப்பு தன்மை ஆகிய வற்றை அவர் ஆய்வு செய் தார். இதுதொடர்பாக நிருபர் களுக்கு அவர் பேட்டி அளித் தார். அப்போது அவர் கூறிய தாவது:-

**அதிகம் கொள்முதல்**

குடவாசல் பகுதியில் உள்ள நேரடி கொள்முதல் நிலையங் களில் நெல் அதிகம் கொள் முதல் ஆகிறது. அந்த நிலையங் களில் கொள்முதல் ஆகும் நெல் மூட்டைகள் திறந்த வெளி கிடங்குகளில் அடுக்கி வைக்கப்படுகின்றன.

திறந்த வெளி கிடங்குகளுக்கு நெல் மூட்டைகளை எடுத்துச் செல்வதற்கு கூடுதல் லாரி களுக்கு ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. அதேபோல் லாரி களில் இருந்து நெல் மூட்டை களை இறக்கி அடுக்கி வைப் பதற்கு தேவையான பணி யாளர்களும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். குடவாசலில் 28 பணியா ளர்கள் புதிதாக நியமிக்கப்பட் டுள்ளனர். கிடங்குகளுக்கு தேவையான சாக்குகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பாதுகாப்பு**

மழைக்காலம் தொடங்கு வதற்கு முன்பாக திறந்த வெளி கிடங்குகளில் நெல் மூட்டை களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறி னார். ஆய்வின்போது தர ஆய் வாளர் ஜெயபால், உதவி ஆய் வாளர் சுப்பிரமணியன் மற் றும் பலர் உடன் இருந்தனர்.

**ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டும் கீழணை பாசன விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம்**

**சிதம்பரம்,**

மாவட்டத்தில் உள்ள ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்று கீழணை பாசன விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## விவசாயிகள் சங்க ஆலோசனைக்கூட்டம்

கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் காட்டுமன்னார்கோவிலில் நடந்தது. கூட்டத்திற்கு சங்க தலைவர் விநாயகமூர்த்தி தலைமை தாங்கினார். சங்க நிர்வாகிகள் அன்பழகன், பாரதி, அப்துல்வதூது ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொறுப்பாளர் மணிவண்ணன் வரவேற்றார்.

கூட்டத்தில் பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:-

## தீர்மானம்

காவிரி மேலாண்மை வாரியம் மூலம் கண்காணிப்புக்குழு அமைக்கவேண்டும். கடலூர் மாவட்டத்தில் என்.எல்.சி நிறுவனத்தினால் நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிக்கு கீழே சென்று உப்பு நீராக மாறிவருவதை தடுக்கும் வகையில், என்.எல்.சி நிறுவனத்தின் ஓராண்டு லாபத்தில் ஆயிரம் கோடியை பெற்று நிலத்தடி நீர்மட்டம் உயர செருவூட்டுதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆறுகளிலும் தடுப்பணை மற்றும் கதவணைகள் கட்டப்பட வேண்டும். என்.எல்.சி நிர்வாகம் மூலம் மின்சாரத்தை பெற்று கடலூர் மாவட்டம் முழுவதும் 24 மணி நேரமும் வீடுகளுக்கும், விவசாயத்திற்கும் இலவசமாக வழங்க வேண்டும். நெல் மற்றும் கரும்புக்கு சாமிநாதன் குழு பரிந்துரையின் படி ஏக்கருக்கு உற்பத்தி செய்யும் செலவைவிட 50 விழுக்காடு லாபத்தில் ஒவ்வொரு ஆண்டும் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

## புதிய தடுப்பணைகள்

தற்போது, 180 ஆண்டுகள் பழமையான கீழணை பாலம் ஷட்டர்கள் கடந்த ஆண்டு பழுதடைந்ததால் 20 டி.எம்.சி தண்ணீர் வீணாக கடலுக்கு சென்று கலந்தது. எனவே, வரும் ஆண்டுக்குள் பழுதடைந்த அனைத்து ஷட்டர்களையும் சீரமைத்து பாசனத்திற்கு தண்ணீரை சேமிக்கவேண்டும். மேலும், கொள்ளிடம் ஆற்றில் ஆதனூர்- குமாரமங்களம் இடையே பாலம் கட்டவேண்டும். கொள்ளிடம் ஆற்றில் உப்புநீர் புகாதவாறு நீரை சேமிக்க சாத்தியக்கூறு உள்ள இடங்களில் புதிய கதவணை மற்றும் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும். மேலும், டெல்டா

மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு ஊராட்சிக்கும் குறைந்த வாடகையில் நெல் அறுவடை இயந்திரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. கூட்டத்தில் வைத்தியநாதசாமி, கலியமூர்த்தி உள்பட விவசாயி சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

**ரூ.10 கோடியில் தூர்வாரப்பட்ட வெள்ளாற்று முகத்துவாரம் மீண்டும் தூர்ந்து போனது**




**பரங்கிப்பேட்டை,**

பரங்கிப்பேட்டை அன்னங்கோவிலில் ரூ.10 கோடியில் தூர்வாரப்பட்ட வெள்ளாற்று முகத்துவாரம், மீண்டும் தூர்ந்து போனதால் கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல முடியாமல் மீனவர்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

<u>முகத்துவாரம் தூர்ந்து போனது</u>

பரங்கிப்பேட்டை அன்னங்கோவில் கடலோரப்பகுதியில் சுமார் 100-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உள்ளது. இந்த கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள் தங்களது படகுகள் மூலம் கடலுக்கு சென்று மீன் பிடித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு அன்னங்கோவில் வெள்ளாற்று முகத்துவாரம் தூர்ந்து போனதால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், பரங்கிப்பேட்டை சுற்று வட்டார மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்களின் நலன் கருதி தமிழக அரசு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அன்னங்கோவில்

வெள்ளாற்று முகத்துவாரத்தை தூர்வாரும் பணி நடந்தது. கடந்த 6 மாதத்திற்கு முன்பு இந்த பணி நிறைவடைந்ததையடுத்து பரங்கிப்பேட்டை பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் தங்களது படகுகள் மூலம் அன்னங்கோவில் வெள்ளாற்று முகத்துவாரம் வழியாக கடலுக்கு சென்று மீன் பிடித்து விற்பனை செய்து வந்தனர்.

<u>மீண்டும் தூர்ந்தது</u>

முகத்துவாரம் தூர்வாரும் பணி முறையாக நடைபெறாததால் கடந்த சில நாட்களுக்கு முன் மீண்டும் வெள்ளாற்று முகத்துவாரம் தூர்ந்து போனது. இதனால், பரங்கிப்பேட்டை பகுதிகளில் உள்ள பெரிய விசைப்படகுகள் வெள்ளாற்றில் இருந்து முகத்துவாரம் வழியாக கடலுக்கு மீன்பிடிக்க செல்ல முடியவில்லை. அப்படியே சென்றாலும் படகுகள் சேதமடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தால் 100-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாமல் தங்களது படகுகளை அந்தந்த பகுதி கடலோரத்தில் நிறுத்தி வைக்கும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**ஏரி, குளம், மதகுகளை தூர்வாரி சீரமைக்க விவசாயிகள் வலியுறுத்தல்**



பெரம்பலூர் மாவட்டத்தில் நீர்ஆதாரங்களை பெருக்கிட ஏரி, குளம், மதகுகளை தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட் டத்தில் வலியுறுத்தப் பட்டது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் தரேஸ்அஹமது தலைமையில் வேளாண்மைத் துறைக்காக பிரத்யேகமாக கலெக்டர் அலுவலக பெருந் திட்ட வளாகத்தில் கட்டப் பட்டுள்ள புதிய அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு வருவாய் கோட்ட உதவி கலெக்டர் மது சூதன்ரெட்டி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவி யாளர் இரா. கனகசபை, வேளாண்மை இணை இயக் குனர் (பொறுப்பு) ஆல்பிரட், மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் வளர்மதி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தமிழக விவசா யிகள் சங்க மாநில செயலாளர் ஆர்.ராஜா சிதம்பரம், பெரம் பலூர் மாவட்டத்தலைவர் மாணிக் கம், தமிழக விவசாயி கள் சங்கம் சார்பில் செல்ல துரை, ஏ.கே.ராஜேந்திரன், வேப்பந் தட்டை ஜெயராமன், வி.களத்தூர் ராஜூ, திருவள்ளுவர் உழவர் மன்றத் தலைவர் கு.வரதராசன், தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசா யிகள் சங்க மாநிலத் தலைவர் பூ.விசுவநாதன் மற்றும் விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் பேசினார்கள்.

கூட்டத்தில் பேசிய விவசா யிகள் வைத்த கோரிக்கைகள் வருமாறு :–

மாவட்டத்தில் வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயி களுக்கு வயல்களில் அறுவடை முடிந்த வெங்காயத்தை சருகு டன் பாதுகாக்க பட்டரை அமைத்து பாதுகாத்து வருகின்றனர்.

இதற்காக அரசு ஒரு வயலுக்கு வெங்காய பட்டரை மீது தகர கொட்டகை அமைப் பதற்கு ரூ.4ஆயிரம் மானியம் வழங்கிவருகிறது. இம் மாவட் டத்திற்கு 35 டன் அளவிற்கு மட்டுமே தகர கொட்டகை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள தாக அறி கிறோம். பரிட்சார்த்த முறையி லான இந்த திட்டம் வெங்காய சாகுபடி விவசாயி களுக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்பதால், மானிய நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்கிட வேண்டும்.

வட்டி தள்ளுபடி

கல்விக்கடன் மீதான வட்டித்தள்ளுபடி செய்துள்ள மத்திய அரசுக்கு விவசாயி கள் தரப்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 2 ஆண்டுகளாக பெரம்பலூர் மாவட்டத்தில் போதிய மழைஇல்லாததால், 50 டன் விளையவேண்டிய வயலில் 15 டன் கரும்பு மட்டுமே விளைகிறது. 30 மூட்டை முத்துசோளம் மகசூ லுக்கு 7 மூட்டை ம ட் டுமே கிடைக்கிறது. ஆகவே விவ சாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி வழங்கிட தமிழக அரசு நடவடிக்கை வேண்டும்.

தூர் வார நடவடிக்கை

பெரம்பலூர் மாவட்டத்தில் நீர்ஆதாரத்தை பெருக்கிட ஏரிகள், நீர்வரத்து வாய்க் கால்கள், ஏரி மதகுகளை தூர்வாரி சீரமைக்கவேண்டும். கல்லாறு, வெள்ளாற்றில் தடுப்பு அணைகளை கட்ட வேண்டும். விஸ்வக்குடி நீர்த் தேக்க திட்டத்தை செயல் படுத்தியதுபோல, கல்லாற்றின் குறுக்கே சின்னமுட்டுலு நீர்த் தேக்க திட்டத்தை விரைந்து செயல்படுத்தவேண்டும்.

வேப்பந்தட்டை தாலுகா வில் 2 ஆண்டாக பருவமழை பொய்த்து விட்டதால், கிணறு கள் வறண்டு போய்விட்ட:து. இந்த நிலை நீடித்தால் இப் பகுதியில் மானாவாரி பயிர் கள் கூட சாகுபடி செய்ய முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டு விடும். எனவே விவசாயத்தை காப்பாற்ற அடிக்கிணறு 10 முதல் 15 அடி ஆழம் வரை வெட்டுவதற்கு செலவாகும் 1 முதல் ரூ.2 லட்சம் வரையிலான தொகையை மானியத்துடன் கூடிய வங்கிக்கடனாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாய மின் இணைப்பு கேட்டு ஆண்டுக்கணக்கில் காத்திருக்கும் விவசாயிகளுக்கு விரைந்து மின்இணைப்பு வழங்கிடவேண்டும்.


இவ்வாறு விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகளின் கேள்வி களுக்கு மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமது பதில் அளித்து பேசினார்.

குத்துவிளக்கு ஏற்றினார்

முன்னதாக பெரம்பலூரில் புதிதாக கட்டப்பட்ட வேளாண்மைத்துறை அலு வலக கட்டிடத்தை காணொலி மூலம் முதல்அமைச்சர் ஜெய லலிதா திறந்துவைத்தார். அப் போது மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது குத்துவிளக்கு ஏற்றினார். இந்த நிகழ்ச்சியில் நகர்மன்றத்தலைவர் சி.ரமேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**2½ லட்சம் மாடுகளுக்கு சினை ஊசி**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் 2½ லட்சம் மாடுகளுக்கு சினை ஊசி போடப்பட்டு வருகிறது.

<u>கால்நடை வளர்ப்பு</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தப்படியாக கால்நடை வளர்ப்பு தொழில் உள்ளது. இதில் கிராமங்களில் மட்டுமின்றி நகரங்களில் கறவை மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மாடுகள் திறந்தவெளியில் மேய்ச்சலுக்கு சென்று வந்தன.

தற்போது மேய்ச்சல் நிலங்கள் வெகுவாக குறைந்து விட்டதால், வீடுகளிலேயே தீவனங்கள் வைத்து வளர்க்கப்படுகின்றன. இதனை கருத்தில் கொண்டு கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மாடுகளுக்கு சினை ஊசி போடப்பட்டு வருகிறது.

<u>சினை ஊசி</u>

இதில் நாட்டு மாடுகள், ஜெர்சி, கலப்பின மாடுகளுக்கு தனித்தனியாக சினை ஊசி போடப்பட்டு வருகிறது. இதற்காக திருநெல்வேலி, ஊட்டி, தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் சினைஊசி வகைகள் வாங்கப்படுகின்றன. இவைகள் திண்டுக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையின் உறைவிந்து வங்கியில் சேமித்து வைக்கப்படும்.

பின்னர் இவைகள் மாவட்டம் முழுவதும் உள்ள கால்நடை ஆஸ்பத்திரிகள் மூலம் மாடுகளுக்கு சினைஊசி போடப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் வெண்மை புரட்சியை ஏற்படுத்தும் வகையில் பால் உற்பத்தியை பெருக்க அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

<u>2½ லட்சம் மாடுகள்</u>

எனவே, மாடுகளுக்கு சினைஊசி போடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் 2½ லட்சம் மாடுகளுக்கு சினைஊசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்த இலக்கை அடையும் வகையில் அரசு கால்நடை ஆஸ்பத்திரிகள் மூலம் சினைஊசிகள் போடப்பட்டு வருகின்றன.

இந்த பணியில் கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் ரவிச்சந்திரன் மேற்பார்வையில் கால்நடை டாக்டர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**பரப்பலாறு அணையில் கரிசல்மண் அள்ள அனுமதிக்க வேண்டும்**

**திண்டுக்கல்,**

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் பரப்பலாறு அணைப்பகுதியில் கரிசல் மண் எடுக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

<u>விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>

திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் வெங்கடாசலம் தலைமை தாங்கினார். இதில் பல்வேறு விவசாயிகள், விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

ஸ்ரீராமபுரம் பகுதியில் சிலர் மோர் வத்தல் உப்பு கழிவுகளை கொட்டுகின்றனர். இதனால் சுகாதார கேடு ஏற்படுவதுடன், நிலத்தடி நீர் வெகுவாக பாதிக்கப்படுகிறது. மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் பிரச்சினை தலைவிரித்து ஆடுகிறது, பல ஆயிரம் அடி ஆழ்துளை கிணறுகள் அமைத்தாலும், தண்ணீர் இல்லாத நிலையே நிலவுகிறது.

<u>செயற்கைக்கோள் மூலம்...</u>

எனவே செயற்கைக்கோள் மூலம் தண்ணீர் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கடந்த 2 ஆண்டுகளாக கடுமையான வறட்சி நிலவுவதால் திண்டுக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்.

2013-14 ஆண்டிற்கான பயிர்காப்பீட்டு தொகை இன்னும் வழங்கப்படாமல் உள்ளது. உரிய காலத்தில் விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும்.

பழனி பரப்பலாறு அணைப்பகுதி தற்போது வறண்டு கிடப்பதால் அதில் உள்ள கரிசல் மண்ணை எடுத்து விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும். விவசாயிகள் கரிசல் மண் எடுப்பதால் அணை ஆழப்படுவதுடன், விவசாய நிலங்களுக்கும் பயன்படும். எனவே விவசாயிகள் கரிசல் மண் அள்ளுவதற்கு பொதுப்பணித்துறை அனுமதிக்க வேண்டும்.

<u>கால்நடைகளுக்கு தீவனம்</u>

பள்ளப்பட்டி பகுதியில் தனியார் சிப்காட் நிறுவனம் மூலம் ராட்சத ஆழ்துளை கிணறு அமைத்து, அதில் சக்திவாய்ந்த மோட்டார் மூலம் அதிகப்படியான நீரை ஊறிஞ்சுகின்றனர்.

இதனால் பள்ளப்பட்டி கிராம மக்கள் குடிநீருக்காக அலைய வேண்டிய நிலை ஏற்படும். தற்போது பழனியில் அரசால் வழங்கப்பட்ட 35 ஆடுகள் மர்ம நோய் தாக்கி இறந்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும்.

<u>சிறுதானிய பயிர் வகைகள்</u>

இதற்கு பதில் அளித்து கலெக்டர் வெங்கடாசலம் பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த ஆண்டைவிடவும் மழை குறைவாக உள்ளது. இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து கண்மாய்களும் வறண்டு போயின. கிணறுகளில் தண்ணீர் இருக்கும் அளவிற்கேற்ப சிறுதானியங்கள், பயறு மற்றும் எண்ணெய் வித்துகள் பயிர்களை பயிரிட விவசாயிகளுக்கு புதிய வேளாண்மைக் தொழில்நுட்ப தகவல்களை வழங்கி செயல்படுத்தி வருகிறது. நடப்பு பருவத்திற்கேற்ப தேவையான விதைகள், உரங்களை மாவட்ட நிர்வாகம் கொண்டுள்ளது.

**கால்நடைகளுக்கான இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் மார்ச் 1-ந்தேதி முதல் 21-ந்தேதி வரை நடக்கிறது**

விருதுநகர் மாவட்டத்தில் 6-ம் கட்டமாக வருகிற மார்ச் 1 முதல் 21-ந்தேதி வரை கால்நடைகளுக்கான இலவச கோமாரிநோய் தடுப் பூசி முகாம் நடைபெற உள்ளது.

இது குறித்து விருதுநகர் மாவட்ட கலெக்டர் ஹரிஹரன் விடுத்துள்ள ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

<u>தடுப்பூசிப் பணி</u>

தமிழகம் முழுவதும் உள்ள கிராமம் மற்றும் குக்கிராமங்க ளில் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி திட் டத்தின் கீழ் 5 சுற்று தடுப்பூசிப் பணி முடிவடைந்துள்ளது. தற்போது வருகிற மார்ச் 1-ந் தேதி முதல் 21-ந்தேதி வரை 6-வது சுற்று தடுப்பூசிப்பணி நடைபெற உள்ளது. தமிழகம் முழுவதும் 1 கோடியே 32 லட் சம் பசுவினம் மற்றும் எருமை இனங்களுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. விருது நகர் மாவட்டத்தில் தடுப்பூசி போடும் பணியை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு அனைத்து கால் நடை மருந்தகங்களிலும் இந் நோய்க்கான ஊநீர் அதற்கென உருவாக்கப்பட்ட குளிரூட்டும் அறைகளில் தயார் நிலையில் வைக்கப்பட் டுள்ளது. இத் தடுப்பூசி பணிக்கென பிரத்யேகமாக ஏற்படுத் தப்பட்டுள்ள தடுப்பூசி குழுவினர் மூலம் குளிர் சங்கிலி முறையில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள அனைத்து பசு வினம் மற்றும் எருமையினங்களை கணக்கிட்டு அவ்வனைத்துக்கும் தடுப்பூசி போடப்பட உள்ளது. இதன் மூலம் விருதுநகர் மாவட்டத்தில் 100 சத வீதம் தடுப்பூசிப்பணி மேற் கொள்ளப்படும்.

<u>கிராம சபைக் கூட்டம்</u>

கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடுவதன் அவசியம் குறித்து கால்நடை உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் வருகிற 25-ந்தேதி காலை 11 மணிக்கு சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடத்தப்பட உள்ளது. இக்கூட்டத்தில் கிராம மக்கள் அனைவரும் கலந்து கொண்டு கால்நடை மருத்துவர்கள் கூறும் அறிவுரையின்படி அவர்கள் குறிப்பிடும் தேதியில் குறிப்பிட்ட இடங்களுக்கு கால்நடைகளை அழைத்துச் சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கால் மற்றும் வாய் கோமாரி நோயானது குறிப்பாக கலப் பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற் பத்தி இழப்பினை ஏற்படுத்துகி றது. இந்நோயினால் இறப்புகள் குறைவாக இருந்த போதிலும் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளின் வேலைத்திறன் குறைவு,கறவை மாடுகளில் சினை பிடிப்புதடைபடுவது, இளங்கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகள் ஏற்பட்டு பொருளாதார இழப்பு ஏற்படும். இந்நோயால்

பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் மற்ற மாடுகளுக்கும் இந்நோய் பரவு கிறது. எனவே விவசாயிகள் தங்களது பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் 4 மாதத்திற்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசியினை தவறாது போட்டுக் கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**தூத்துக்குடியில் விற்பனைக்காக தர்பூசணி பழங்கள் குவிந்தன**



தூத்துக்குடியில் விற்பனைக்காக தர்பூசணி பழங்கள் குவிந்து உள்ளன.

<u>கோடைகாலம்</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கோடைகாலம் தலைதூக்க தொடங்கி உள்ளது. கடந்த சில நாட்களாக பனி குறைந்து விட்டது.

அதே நேரத்தில் காலை முதல் வெயிலின் தாக்கம் அதிக அளவில் உள்ளது. இதனால் கோடையை சமாளிக்க மக்கள் குளிர்ச்சியான பொருட்களை நாடத் தொடங்கி உள்ளனர்.

<u>தர்பூசணி</u>

இந்த நிலையில் தூத்துக்குடி பகுதியில் தர்பூசணி பழங்கள் விற்பனைக்காக குவியத் தொடங்கி உள்ளது.

இந்த பழங்கள் திண்டிவனம் பகுதியில் இருந்து அதிகமாக கொண்டு வரப்படுகிறது. ஒரு கிலோ தர்பூசணி பழம் ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தர்பூசணி பழ ஜூசும் விற்கப்படுகிறது.

**கடல் அலைகளின் வேகம், வெப்பநிலை அறிய, மிதவை பந்து கடலில் மிதக்க விடப்படுகிறது**



தூத்துக்குடி கடல் பகுதியில் அலைகளின் வேகத்தையும், வெப்பநிலை உள்ளிட்டவைகளை அறியவும் மிதவை பந்து மிதக்க விடப்படுகிறது.

<u>மிதவை</u>

இந்திய தேசிய கடல் தகவல்கள் சேவை மையம், ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், தூத்துக்குடி காமராஜ் கல்லூரி ஆகியவை இணைந்து தூத்துக்குடி கடல் அலைகளின் வேகம், வெப்பநிலை, அதிர்வுகள் உள்ளிட்டவைகளை அளவிடும் வகையில் ரூ.40 லட்சம் மதிப்பிலான மிதவை பந்து தூத்துக்குடி அருகே ஆழ்கடல் பகுதியில் மிதக்க விடப்பட உள்ளது.

இந்த மிதவையில் கடல் அலைகளின் வேகத்தை அறியவும், ஆழ்கடலில் உருவாகும் அதிர்வுகளை கண்டறியவும், வெப்பநிலையை கணக்கிடவும் நவீன கருவிகள் பொருத்தப்பட்டு உள்ளன.

இந்த கருவிகள் செயற்கை கோள்கள் மூலம் ஐதராபாத்தில் உள்ள ஆராய்ச்சி கூடத்துடன் இணைக்கப்படுகின்றன. இந்த மிதவையால் உணரப்படும் சிறு சிறு பதிவுகளும் ஐதராபாத் ஆராய்ச்சி மையம், தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் அமைக்கப்பட்டு உள்ள மையங்களுக்கு நேரடியாக வந்து சேருகின்றன.

<u>அலையின் உயரம்</u>

இதன் மூலம் மீனவர்களின் சிக்கல்களை தீர்க்கவும், மீனவர்களுக்கு அதிக மீன்கள் கிடைக்க சாதகமான பகுதி, கடல் அலை உயரம், காற்றின் வேகம், பேரலை மற்றும் சுனாமி குறித்த முன்னறிவிப்புகளை செயற்கைக்கோள் உதவியுடன் கண்டறிய முடியும்.

இந்த மிதவை சிறு படகு மற்றும் கட்டுமரத்தில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு, கடல் அலை உயரம், காற்றின் வேகம் மற்றும் திசை குறித்த கணிப்பினை முன் கூட்டியே அளிக்கக்கூடியது. இந்த மிதவையானது கடல் அலையின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்றாற்போல் மீள்தன்மையுடன் அமையும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு 6 மணி நேரத்துக்கும் கரையில் இருந்து 10, 20, 50, 100 கிலோ மீட்டர் தூர இடைவெளியில் ஏற்படும் அலை உயரத் தகவல்களை துல்லியமாக கணித்து வழங்கும் தன்மை உடையது.

மேலும் நிகழ்கால கடல்நிலை முன்னறிவிப்பு தகவல்களையும் பெறலாம். இதன் மூலம் கடலின் தன்மையை மிகவும் துல்லியமாக அறிந்துக் கொள்ளலாம்.

இந்த மிதவையை தூத்துக்குடி கடல் பகுதியில் மிதக்க விடுவதற்கான பணிகள் நடந்து வருகின்றன.

**கடல் ஆமை இனப்பெருக்கத்துக்கு முட்டை சேகரிக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரம்**



**நாகர்கோவில்,**

கடல் ஆமைகள் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கடற்கரைக்கு வந்து முட்டையிட்டு, அவற்றை கடல் மணலில் குழி தோண்டி புதைத்து வைத்து விட்டு செல்லும். சிலர் அந்த முட்டைகளை எடுத்து சென்று விடுவார்கள். மேலும் முட்டைகளை நாய்கள் உடைத்து விடும். இதை தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளனர்.

கடல் ஆமை இனப்பெருக்கத்துக்கு ராஜாக்கமங்கலம் கடற்கரை அருகே ஒரு குடில் போல் அமைத்து உள்ளனர். அந்தப்பகுதிக்கு வந்த 3 கடல் ஆமைகள் முட்டையிட்டன. முதல் ஆமை 116 முட்டைகளும், 2–வது ஆமை 80 முட்டைகளும், 3–வது ஆமை 69 முட்டைகளும் என மொத்தம் 265 முட்டையிட்டன. வன ஊழியர்கள் அவற்றை கைப்பற்றி பாதுகாப்பாக வைத்து உள்ளனர்.

இதுபற்றி மாவட்ட வன அதிகாரி ரிட்டோ சிரியாக்கிடம் கேட்ட போது, ‘‘கடல் ஆமை இனப்பெருக்கத்துக்காக, அதன் முட்டைகளை சேகரித்து 45 முதல் 60 நாட்கள் பாதுகாத்து, பின்னர் குஞ்சுகளை பராமரித்து இறுதியில் கடலில் விட திட்டமிட்டு உள்ளோம். இதற்காக 6 பேர் நியமிக்கப்பட்டு உள்ளனர். ஒரு கடல் ஆமை ஒரே நேரத்தில் 70 முதல் 140 முட்டை வரையிடும்’’ என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## ராமேஸ்வரம் தீவு கடற்பகுதியில் அதிவேக கத்தி மீன்கள் வரத்து அதிகரிப்பு

- 
- 

ராமேஸ்வரம் தீவு கடற்பகுதியில் அதிவேக கத்தி மீன்களின் வரத்து தற்போது அதிகரித்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்வார்ட் ஃபிஷ் (sword fish) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த மீனை தமிழக மீனவர்கள் கத்தி மீன் அல்லது வாள் மீன் என்று அழைக்கின்றார்கள். இதனுடைய விலங்கியல் பெயர் சைபியஸ் கிளாடிஸ் ஆகும். கிளாடியஸ் என்றால் லத்தின் மொழியில் வாள் என்ற அர்த்தமாகும்.

இந்த கத்தி அல்லது வாள் மீன் மிக வேகமாக நீந்தக்கூடிய மீன் இனம் ஆகும். மணிக்கு சராசரியாக 80ல் இருந்து 90 கிலோ மீட்டர் வரையிலும் இந்த மீன்கள் நீந்தும். கத்தி மீன் வேகத்திற்கு பெயர் போனதால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் தங்களின் போர்க்கப்பல்களுக்கு ஸ்வார்ட் ஃபிஷ் என்று இந்த மீனின் பெயரை சூட்டியுள்ளனர்.

இந்த மீனின் தாடை வாள் போன்று இருப்பதால் அதனை கத்தி போன்று பயன்படுத்தி தனது இரையை வேட்டையாடும். ஆனால் இந்த மீன் மீனவர்களை தாக்குவது கிடையாது. மாறாக கத்தி மீன் கடலின் மேல் பரப்பில் தாவி தாவி நீந்தும் போது படகில் உள்ள மீனவர்களை தனது தாடையால் காயத்தை ஏற்படுத்தி விடுவதும் உண்டு. இத்தகைய விபத்துக்களால் மீனவர்கள் இறந்த சம்பவங்களும் உண்டு. இந்த மீன் சராசரியாக அதிகப்பட்சம் 15 அடி வரையிலும் வளரக் கூடியது.

இத்தகைய கத்தி மீன்கள் பிறந்த ஐந்து ஆண்டுகள் கழித்த இனப்பெருக்கத்திற்கு தயாராகின்றன. பின்னர் ஒரே சமயத்தில் 10 மில்லியன் முட்டைகள் வரை இடும். முட்டைகளில் இருந்து முதலில் லார்வாக்கள் வளர்ச்சியடையும். பின்னர் கத்தி போன்ற அதன் தாடைகள் வளர்ச்சி அடைகின்றன. சிறந்த வேட்டையாடி மீன் இனமான கத்தி மீன் தனித்தனியாக இரைகளை வேட்டையாடும்.

தற்போது ராமேஸ்வரம் தீவு கடற்பகுதியில் கத்தி மீன்களின் வரத்து அதிகரித்துள்ளது.

மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடற்பகுதிகளில் கடல் நீர் வெதுவெதுப்பாகவும், ஆழம்குறைவாக காணப்படுவதால் இனப்பெருக்கத்திற்காக தற்போது இதன் வருகை அதிகரித்திருக்கலாம் என மீனவர்கள் தெரிவித்தனர்.

அட்லாண்டிக் பெருங்கடலில் கூட்டங் கூட்டமாக காணப்படும் கத்தி மீன் தற்போது ராமேஸ்வரம் தீவு பகுதிகளில் அதிகமாக வருகை தருவது மீனவர்களை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

## தூத்துக்குடி: புயல், மீன் வளத்தை அறிய நவீன கருவி; கடலில் மிதந்தபடி தகவல் வரும்!



கடல் தன்மை மற்றும் மீன் வளத்தை துல்லியமாக அறிய, தூத்துக்குடி கடல் பகுதியில் நிறுவப்படும் கடல் அலை மிதவை.

தென் தமிழக மாவட்டங்களின் கடலின் தன்மை மற்றும் மீன் வளம் குறித்த தகவலை துல்லியமாக தெரிந்து கொள்ள, தூத்துக்குடி கடல் பகுதியில், கடல் அலை மிதவை கருவி வெள்ளிக்கிழமை நிறுவப்படுகிறது.

தேசிய கடல் தகவல்கள் சேவை மையம் (இன்காய்ஸ்), எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி ஆகியவை சார்பில், கடல் நிலை தகவல்களை அறியவும், மீனவர்களுக்கு உதவுவதற்காகவும், துறைமுக மேம்பாட்டுக்காகவும், அலை சவாரி மிதவை ஒன்று வெள்ளிக்கிழமை (பிப்.21) காலை ஆழ்கடலில் மிதக்க விடப்படுகிறது.

கடலடியில் ஏற்படும் அதிர்வுகள் மற்றும் அழுத்தத்தில் ஏற்படும் மாற்றங்களை கண்காணித்து, அவற்றை இன்காய்ஸ் மையத்துக்கு தகவல் அனுப்பும்.

அதுபோல், கடல் அலையின் உயரம், காற்றின் வேகம் மற்றும் திசை குறித்த கணிப்பை முன் கூட்டியே அளிக்கும். இதன் மூலம் சிறு படகு மற்றும் கட்டுமரத்தில் தொழில் செய்யும் மீனவர்களுக்கு, சேதங்களைத் தவிர்ப்பதுடன், உயிர் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும்.

மீனவர்களின் நலன் கருதி இன்காய்ஸ் நான்கு நாட்களுக்குரிய தகவல்களை ஒவ்வொரு 6 மணி நேர இடைவெளியில் கணித்து வழங்கும். இத்தகவல்கள் ஆண்டு முழுவதும் வழங்கப்படுவதால், சிறு மீனவர்களுக்கு அதிக பயனுள்ளதாக அமையும். இதன் கணிப்பு 90 முதல் 100 சதவீதம் சரியாக இருப்பதாக தொடர் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**ரூ.40 லட்சம்**

இத்தகவல்கள் பொதுவான தாக இல்லாமல் அந்தந்த கடற்கரை பகுதிக்கு ஏற்ற வகையில் துல்லியமாக கணக்கிட்டு கூறுவதால், சிறு மீனவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக உள்ளது. மிதவையின் மதிப்பு ரூ. 40 லட்சம்.

**மிதவையின் சிறப்பு அம்சங்கள்**

கடல் அலை மற்றும் கடல் காற்றின் தன்மை, மீன் வளம், கரையிலிருந்து 10, 20, 50, 100 கி.மீ. தூர இடைவெளியில் ஏற்படும் அலை உயரம் குறித்த தகவல்களை, இக்கருவி துல்லியமாக கணித்து ஒவ்வொரு 6 மணி நேரத்துக்கும் வழங்கும். கடலில் புயல் மற்றும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஏற்படும் நேரங்களில் ராட்சத அலைகள் உருவாகும். இக்காலக் கட்டங்களில் இன்காய்ஸ் உரிய நேரத்தில் கிராம அறிவு மையங்களுக்கு மின்னணு கருவிகள் மூலம் எச்சரிக்கை விடுக்கும்.

இத்தகவல்களை மீனவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில், எஸ்.எம்.எஸ். மற்றும் ஒலிவடிவ குறுஞ்செய்தி மூலம் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி இணைந்து வழங்கும். இதன் மூலம் மீனவர்களுக்கு மட்டுமின்றி, துறைமுகத்துக்கும் பல அரிய தகவல்களை பெற முடியும்.